[illegible]

V 6 No. 27 9 July 1931

ஊ211, N28 KN
N31'4'27.
188925

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ஞு ஜூலை மீ 9உ [No. 27.

3 0 JUL 1931

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 521
2. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம்-28—37) K. இராமரத்நம் ஐயர் B.A. 523
3. நவராத்திரி — ஓர் நாடகம் K. N. சுந்தரேசன் B. A. (Hons) 525
4. கம்பராமாயணம் (நகர் நீங்கு படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 527
5. மானதசாத்திரம் (இடவுணர்வு) T. P. மீனாக்ஷிசுந்தரம் M.A. B.L 530
6. அப்பர் (64-கலை-ஆகாயப் பிரவேசம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 532
7. யாப்பிலக்கணம் (செய்யுள்-ஓசை) 534
8. தனிப் பாடல்—(தமிழ்மொழி விழைவு) க. சோமசுந்தரம் பிள்ளை 536
9. வர்த்தமானம். 539

கலாநிலயம்

188925

அருமையினு மருமை.

பெரிய வெரியவெனப் பாராட்டப்பெறுகின்ற காரியங்கள் பலவற்றைப் பெரும்பாலும் யாவராலும் ஒருவாறு சாதித்துவிட இயலும். உண்மையை உற்று நோக்கின், கருதுதற்கும் பற்றாத மிகச்சிறியனபோல் தோன்றுபவைகளே அந்தத்தில் செய்துமுடிப்பதற்கியலாத அருமையுடையவைகள் ஆகின்றன. நெப்போலியன் அலெக்ஸாண்டர் முதலிய போர்வீரர்களைப்போல் உலகத்தின் ஒரு பெரும் பகுதியை வென்றடக்கலாம். எடிஸன் முதலிய பூதசாத்திரவிற்பன்னரைப்போல், இயற்கைத் தத்துவங்களை அறிந்துவென்ற ஆற்றலால் நம்புதற்கரிய எந்திரங்களையும் கருவிகளையும் அமைக்கலாம். காற்றிற்கும் கடலிற்கும் கனலிற்கும் கடிவாளமிட்டு உகைக்கலாம். கம்பரையும் ஷேக்ஸ்பியரையும்போல் கவிகள்பாடிவிடலாம். ருஷிய லெனின் போன்றொருவன் புக்கெழுந்து அரசுமுறையையே அடியுடன் புரட்டிவிடலாம். ஒருவன் தன்னுடைய கொள்கையை உரைத்துரைத்து உலக மனத்தையும் உட்கொள்ளலாம். இவையனைய ஒவ்வொன்றையும் நினைக்குங்கால், "இயற்றிய கருமம் பெரிது பெரிது; இயற்றின ஆற்றல் அதனினும் பெரிது" என்று இடையறாது வியக்கின்றது மாந்தர் மனம். இன்னவைகளைச் சாதிக்க எத்துணை மதிநுட்பம், எத்துணை மனத்திட்பம், தாளாண்மை, வேண்டும். எத்துணை மெய்வருத்தம் தாங்கியிருத்தல் வேண்டும். எத்துணை யெத்துணை இடையூறுகளுக்கு ஈடு கொடுத்திருத்தல் வேண்டும். அமெரிக்காவில் மதுபானத்தை ஒழிக்கவேண்டுமென்று முயன்றொருவர்; சட்டத்தின்படி அது முறையே நிறைவேறியும் விட்டது. (எனினும், மதுவால் நனையாது வறண்ட தொண்டைகள் ஆங்குந்தான் இன்று எத்தனை என்பது வேறு கேள்வி).

இவையன்ன பிறபெருங் காரியங்களும் எளிதிலே எல்லோரும் செய்பவல்லன அல்ல வெனினும், அவை ஒருவ ரிருவராலேனும் முடிக்கப் பெற்றிருப்பதால் செய்வதற் கரியனவல்ல. இவைகளைச் செய்வதால் எய்தும் பயன் யாதென்பதை இங்கு வினவவேண்டா அது யாதாகினும் ஆகுக; நம் ஆராய்ச்சி இப்பொழுது அப்பயன்பால் நாடவில்லை எவராலும் ஆற்ற மாட்டாது தப்பிப்போவதே தன் தலையெழுத்தாய்ப் பெற்றிருப்பது எது வெனத் தேர்தலே இன்று நம் கருத்து. அதுதான், செய்யுமிடத்துச் சாதிக்க இயலாததாய்க் கிடப்பினும் சொல்லுமிடத்து மிகச் சுலபம்போல் தோன்றி நிற்குமொரு வஞ்சகச் செய்தியா யிருக்கின்றது—அன்பும் அறனும் உடையதோர் வாழ்க்கை.

அன்பும் அறனும் உடையதோர் வாழ்க்கையை நடத்துபவனே நல்லவனெனற் குரியவன். இவ்வாசகத்தின் வாய்பாட்டைச் சற்றே ஆர அமர்ந்து கருத்துட் கொள்ளவேண்டும். இது உடன்பாட்டு வாக்கியம். பகையும் பாவமும் இல்லாத வாழ்க்கையே நல்வாழ்க்கை என்று யாமிங்கு இயம்பவில்லை. ஒழுக்கத்தைப்பற்றி நினைப்பவரெல்லாம் பெரும்பாலும் அதனை அளவிற்கு விஞ்சி நினைக்கின்றார்களென்று எண்ணுதற் கிடமுளது. பாவத்தைப்பற்றி நாம் அதிகம்

நினைத்துக்கொண் டிருக்கின்றோம் என்பது நிச்சயம். இது வீண். கெட்டவைகளைச் செய்வதா லன்றுநாம் நிரயத்திற் காளாகி நிற்பது; நாம் கெட்டழிவதெல் லாம் நல்லவைகளைச் செய்யாமையாற் றான். விலக் காகி நிற்கின்ற செய்கைகளில் நம் கருத்தை நிலைக்க வைத்தலால் நம்முடைய மனம் தூய்மையழிந் திழி கின்றது. "இது பாவம், இதுபாவம்......ஆதலின் இதனைச் செய்யலாகாது" என்ற நினைவுடையராய் அத ன்படி அப்பாவத்தை நாம் புரியாதிருப்பவராயினும், பிறருடைய செய்கைகளை மதிக்கப் புகுங்காலத்தில், அவை பாவச்செயல்களாயின், ஐயோ, இவர் இப்பா வத்தின் பயனும் எப்பாடு படுவார்களோ. கடவுளே, அவர்க்கு நற்புத்தியளித்து நன்னெறிக்கண் உய்த்தல் ஒரு அருமையோ! எதுசெய்யின் இவர் இத்தீயொ ழுக்கந் தீர்ந்து கடைத்தேறுவார்" என்றென்று இரங் கிப் பரிவுகூரும் சிந்தனைதான் உடையவர்களாகமாட் டோம். மற்றுப் பாவிகள் என்றுமதிக்கும் அவர்பால் பெரும்பகைமைபாராட்டி அவர்தமை எவ்வெவ்வகை களில் வதைத்துத் தண்டிக்கலாம் என்பதே நம்மனோர் நினைவெல்லாம் நிகழ்வதாகும். அந்நினைவு ஒழிந்த வேளையில், "இப்பாவம் செய்திலேம்காண்" என்ற வோர் இரகசியச் செருக்கும் நம் மனத்தின்கண் இடம் பெறும். இக்கட்டுரைக்கு இடைப்பிறவலாகு மெனி னும் இதனை இங்கோர் உதாரணத்தால் விளக்கியபின் மேற்செல்லல் தக்கதெனத் துணிகின்றோம்.

உலகத்தை இக்காலங் கறுவி நிற்கின்றதெனக் கரு தப் படும் பெரும்பெரும் 'பிரச்னை'களில் 'பிச்சைக் காரர் பிரச்னை, என்பதும் ஒன்றாய், வர்த்தமானப் பத் திரிகைகளுக்கும் வாயாடுமேடைகளுக்கும் வாய்த்த தோர் இரையாகிக் கிடப்பதை யாவரும் அறிவார். பிச்சை இரப்போர் இல்லாதொழிவதற்கு எவ்வழி எவ்வழி என வினவுவார் பலர். பிச்சையெடுக்கும் ஏழைகள் வருந்தும் வறுமைநோய்களைக் கண்டு இரங்குபவர்போன்ற மொழிகள் ஒன்றிரண்டு இடை இடையே விரவிவரலாமெனினும், இப்பிச்சைக்காரப் பிரச்னையாளர்களின் சொற்றொடர்கள் முழங்கும் ஆரவாரங்களுக்கிடையே தொடர்ந்துவரும் உட் கருத்தைச் சற்றே ஆழ்ந்து நோக்குங்கால், சென்ற விடமில்லாம் எதிர்நின்று தம்மைக் 'கொடு கொடு' என்று கேட்பதால் விளைந்ததொரு எரிச்சல் புலப் படாது போகாது. வேறுவழியில் பிழைக்கமுடியாத பிச்சைக்காரன் ஒருவன் இருந்தால், முடிந்தும் இது எளிய தென்று பிச்சைக்கு வருகின்ற சோம் பேறிகள் ஆயிரம்பேர் என்றும், இந்தியர் தருமத் தைப்பற்றிக் கொண்டிருக்கும் தப்பெண்ணத்தால் கேட்போருக்கெல்லாம் கொடுத்துவிடுங் குணத்தைத் தமக்கு மூலதனமாகவைத்து இப்பிச்சைத்தொழிலே இலாபமென்று பலர் நடத்த நேர்கின்றதென்றும், ஆகையால் பிச்சைக்காரர் இல்லாது போவதற்கு நாம் ஒருகாசுங் கொடாமல் கரத்தலிற் கைதேர வேண்டியது மிக்க அவசியமென்றும் வாதிப் பார். "பிச்சைக்காரர்களைக் கண்டு மனமிளகாதீர்; இளகினால் தேசத்தின் பொதுநன்மை பாழாய்விடும்" என்று சிலர் அறிவுறுத்தக் கேட்டிருக்கின்றோம். இதனினும் படுகேடுவார்த்தை வேறில்லை. இவர் வாதத்தின் ஒவ்வோ ரங்கமும் பொய். எத்துணை இழிந்தோர்க்கும் இரவச்சம் இல்லாமல் தீராது ஒரு கலியாண வீட்டுவாயிலில் எச்[illegible] திருந்த சோம்பேறி யொருவன் [illegible] இல்லறத்

திறந்து ஒன்றுமில்லாமை கண்டு வெறுத்தனனுப், "சீசீ! இந்த வீட்டு எச்சிற்கலைக்குக் காத்திருந்ததை விடப் பிச்சையெடுத்துப் பிழைக்கலாமே" என்றுரை த்த உண்மையை இவ்விதழ்களில் முன்னோரிடத்தில் குறித்திருப்பது எம் நினைவிற்கு வருகின்றது. எச்சிற் கலையிலேனும் கிடைக்கின்றவரையில் ஒருவனும் பிச் சைக்குப் புகமாட்டான். வேறொன்றுஞ் செய்து பிழைக்கும் வகையற்றவன்தான் இரந்துண்ணற்கும் இசைவான் திண்ணம். உடலில் ஊனமொன்றும் இல்லாமை கண்டு நாம் மதித்திடலாகாது. கையின் மையால் வேறொன்றுஞ் செய்யமாட்டாதவ னாயினு லென்; மனமின்மையா லாயினுலென், நல்லூழின்மை யால் ஆயினுலென். பிச்சைக்கு வந்து ஒருவன் கேட் கின்றான் என்பதே, தனக்குத் தானே கரியாய் நின்று, அவன் வேறொன்றுஞ் செய்து பிழைக்க மாட்டாதவன் என்பதைச் சொல்லிரண்டு புகல்வ தற்கு இடமின்றிக் காட்டிவிடுகின்றது. இனி, "இப் பிச்சைக்காரர்களுக்கு மனமிளகியிளகி நல்கக் கற்கா தீர். கற்பீரேல், பொதுஜன நலமெலாம் பாழாகும்" என்பர் கார்க்கோடகன் விடத்தால் தீய்ந்து சுருங் கிய நளனது வடிவு, "வறியோர்க்கு ஏமங் கொடா தார் அகம்போலக் குறுகிற்று" என்றெடுத்தோதி னர். புகழேந்திப்புலவர். கொடுக்கின்ற கைகள் நீள நீளப் பெருகுவது மாந்தர் மனம். அம்மனத்தைக் குறுக்கி நசிப்பித்தபின் ஜனங்களுக்கு எந்நலம் எய் தும்; எய்தினும் துய்ப்பார்யார்- இவ்வகையிற்பார்க் குங்கால் இரவலர் பாவிகளல்லர், பெருந் தியாகிகள். காமந்தலைக்கேறிய விடர்கள், நன்மகளிரை வஞ்சித்து மனைமாட்சியை அழிக்காவண்ணம், அவர் காமத்தைத் தாம் தாங்கிக் கழித்துதவலால் வேசியர் பொதுஜன ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் ஊழியர்களாவார் என்று ஹாவ்லக் எல்லிஸ் என்றவோர் ஆங்கில அறி ஞர் கூறுகின்றார். அவ்விதமே பிச்சைக்காரர்களும், பொதுஜன மனம் அகன்று நன்மைக்கிடனுய் வள ரும்பொருட்டுத் தம் மானத்தைத் துறந்து இரப்பவர் களாகின்றனர் என்றாலும் ஒக்கும். இதனால், பிச் சைக்காரர் கூட்டம் பெருகும்படியான முயற்சிகள் செய்யவேண்டும் எனும் விபரிதம் விளம்புகின்றோ மென் றெண்ணவேண்டா. அவர் இல்லாது போக வேண்டு மெனின், கொடாதமுறையால் அவரைக் கெடுத்தபின் நாம் வாழ்வதற் கொன்றுமில்லை யாத லின், வரையாது கொடுத்துக் கொடுத்தே இரவென் பதனை இல்லாமலகற்ற இயலு மென்னும் அவ்வுண் மையையும் நினைவிற்கொள்வது நலமென வற்புறுத்து கின்றோம்.

விடயம் இவ்வாறிருக்க இதற்குமாறாக மாந்தர் பிச் சைக்காரர் 'பிரச்னையைக்' கையாள்வதற்குக் காரணம் நாம் நெடிது தேடவேண்டியதில்லை. இரவு என்பது இழிந்தது; ஈகை உயர்ந்தது. இவ்விரண்டில் கொடை யென்னும் உயர்ந்த நன்மையைப்பற்றிச் சிந்திக்கின்ற பழக்கமின்றியே இரவினது இழிவைப் பற்றியே நெடிது நினைக்கின்றார். இரக்காமலிருக்கவும் இரப் போரை இல்லாமற்செய்யவும் நினைப்பதைக் காட்டி லும், ஈகை என்னும் அந்நன்மையைப் பற்றிமட்டும் நினைக்கப் பயில்வாராயின், பிச்சைக்காரப் பிரச்னை யெல்லாம் பறந்துவிடும். அதனோடு, பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கையாகி, இப்பிச்சைக்காரப் பிரச் [illegible]ர் பலரோடு பிரியாது பயின்றுவருகின்ற அவ் [illegible]பேசி இடித்துண்கையும் ஒழியுமே.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[507-வது பக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்

265. மறந்தலை மயங்கி வையத்
தொருவரை யொருவர் வாட்ட
இறந்தலை யுறுமை நோக்கி
இன்னுயிர் போலக் காக்கும்
அறந்தலை நின்ற வேந்த
ரடிநிழ லன்றி யார்க்கும்
சிறந்ததொன் றில்லை கண்டாய்,
திருமணி திகழும் பூணுய். 28.

திருமணி திகழும் பூணுய் - அழகிய ரத்தினங்கள் விளங்கும் ஆபரணங்களை அணிந்த அரசனே, வையத்து - பூமியில், மறம் தலைமயங்கி - கொடுமை அதிகரித்து, ஒருவரை ஒருவர் வாட்ட - ஒருவரை மற்றொருவர் வருத்தலால், இறந்து அலையுறுமை நோக்கி - குடிகள் மிகவும் துன்பப்படாமல் இருத் தலைக்கருதி, இன்னுயிர்போல் காக்கும் - அவர்களைத் தனது இனிய உயிரைப்போலப் பாதுகாக்கும், அறம் தலைநின்ற - தருமத்திலே ஊன்றி நிற்கும், வேந்தர் அடிநிழல் அன்றி - அரசரது காலின்கீழ் வாழ்தலை யன்றி, யார்க்கும் - எவர்க்கும், சிறந்தது ஒன்று - வேறு சிறந்த வாழ்விடம், இல்லை-இல்லை; கண்டாய் - நீ இதனை அறிவாயாக.

இறந்து - எல்லைகடந்து, வரம்பின்றி.

---

266. ஒருமையாற் றுன்ப மெய்து
மொருவனை யும்மை யாலே
திருமையால் முயங்குஞ் செல்வச்
செருக்கொடு திளைப்ப நோக்கி
இருமையு மொருமை யாலே
இயற்றலின் இறைவன் போலப்
பெருமையை யுடைய தெய்வம்
பிறிதினி யில்லை யன்றே. 29.

ஒருமையாலே - முன்னொரு பிறப்பிற்செய்த தீவினையால், துன்பம் எய்தும் ஒருவனை - வறுமை யுற்று வருந்தும் ஒருவனை, உம்மையாலே திருமை யால் முயங்கும் - முற்பிறப்பின் செய்த நல்வினையால் ஒருவன்பெற்று அனுபவிக்கும், செல்வம் செருக் கொடு - செல்வத்தின் பெருமிதத்தோடு, திளைப்ப - அவன் மகிழும்படி, நோக்கி-கடைக்கண் பார்த்தருளி, ஒருமையாலே - தங்களுடைய தனிச்சக்தியாலே, இருமையும் இயற்றலாலே - தீவினைப்பயனைப் போக் கல் நல்வினைப்பயனை ஆக்கல் ஆகிய இரண்டையும் செய்தலாலே, இறைவன்போல - அரசனைப்போல, பெருமையை உடைய தெய்வம் - பெருமையை உடைய ஒரு தெய்வம், பிறிது இல்லை - அவனையன்றி வேறொன்றில்லை. (இனி, அன்று, ஏ, அசை.)

ஒருமை - முன்பிறப்பொன்று. திருமை - அழகு; இங்கு அழகிய நல்வினை. திளைத்தல் - இன்பத்தில் முழுகிக் களித்தல். இருமை - இரண்டு. ஒருமை- தனிமை; பிறருதவியன்றித் தானே ஒரு காரியத்தைச் செய்துமுடிக்கும் ஆற்றல்.

267. கண்ணெனப் படுவ மூன்று;
காவலர், கல்வி காமர்,
விண்ணினிற் சுழல வோடும்
வெய்யவன் என்னும் பேரார்,
எண்ணினுட் தலைக்கண் வைத்த
கண்ணஃ தில்லை யாயின்
மண்ணினுக் கிருளை நீக்கும்
வகைபிறி தில்லை மன்னு. 30.

கண் எனப்படுவ - உலகத்தில் எப்பொருளையும் உள்ளவாறு காணுவதற்குரிய கண்ணென்று சிறப் பித்துச் சொல்லப்படுபவை, மூன்று - மூன்று உள் ளன. அவை: காவலர் - மன்னர்கள், கல்வி காமர் - கல்விநிரம்பிய பேரறிவாளர், விண்ணினில் சுழல ஓடும் வெய்யவன் - ஆகாயத்தில் வளைந்து ஓடும் சூரியன், என்னும் பேரார்-என்னும் பேர்களையுடையவர் ஆவர். எண்ணினுள் - இம்மூவருள், தலைக்கண் வைத்த கண் அஃது - முதலாகச் சொல்லப்பட்ட கண்ணாகிய காவலர், இல்லை ஆயின் - இல்லாமற் போனால், மன்னு - அரசனே, இருளை நீக்கும்வகை - இருளை நீக்கி உண்மைப் பொருள்களை விளக்கிக்காட்டும் வகை, மண்ணினுக்கு - இவ்வுலகத்தவர்க்கு, பிறிது இல்லை - வேறொன்று இல்லை.

கண் - இருளால் மூடப்பட்டு அறியப்படாமற் கிடக்கும் பொருள்களை உள்ளவாறு உணர்தற்குக் கருவியாகிய கண். கல்விகாமர் - கல்வியைக் காமித்த வர், விரும்பியவர்; நூல்களைவிரும்பிக் கற்றுணர்ந்தவர்.

---

268. குடிமிசை வெய்ய கோலுங்
கூற்றமும் பிணியு நீர்சூழ்
படிமிசை யில்லை யாயின்
வானுள்யார் பயிறு மென்பார்?
முடிமிசைத் திவள வேந்தர்
முறைமுறை பணிய விம்மி
அடிமிசை நரலுஞ் செம்பொ
னதிர்கழ லரச ரேறே. 31.

முடி - தமது கிரீடங்கள், மிசை - (உன் கழலின்) மேலே, திவள - விளங்க, வேந்தர் - பல மன்னர்கள், முறை முறை பணிய - வரிசை வரிசையாக வந்து வணங்க, அடிமிசை-பாதங்களின்மீது, விம்மி நரலும்- மிகவும் ஒலிக்கும், செம்பொன் அதிர்கழல் - நல்ல பொன்னாற்செய்த சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த, அரசர் ஏறே - அரசர்களுக்குள் சிம்மம் போன்ற வனே, குடிமிசை-குடிகளினிடத்து, வெய்யகோலும்- கொடுங்கோன்மையும், கூற்றமும் - யமபயமும், பிணி யும் - வியாதிகளும், படிமிசை இல்லை ஆயின்-இம் மண்ணுலகத்தில் இல்லாமலிருந்தால், யார் - எவர் தாம், வானுள் - விண்ணுலகத்தில், பயில்தும்-வாழ்ந் திருப்போம், என்பார் - என்று நினைப்பார்கள்?

நாட்டை ஆளுமரசன் கொடுமை புரியாத செங் கோல் மன்னனாக இருந்து, அந்த நாடு உறுபசியும், ஓவாப்பிணியும், உட்பகையும், கொல்குறும்பும் இல்

லாததாய், தள்ளாவிளேயுளேயும், தக்காரையும் உடைத்தாயிருக்குமாயின், எவரும் இவ்வுலகத்தி லிருப்பதை வெறுத்து விண்ணுலகவாழ்வை விரும்பமாட்டார்கள் என்பதாம். பயிறும்-பயில்தும், தன்மைப்ப்ன்மை விளேமுற்று.

---

269. தண்சுடர்க் கடவுள் போலத்
தாரகைக் குழாங்க டாமே
விண்சுடர் விளக்க மாக
விளங்கல; வேந்தர் போல
மண்சுடர் வரைப்பின் மிக்க
மக்களும் இல்லை கண்டாய்,
கண்சுடர் கனலச் சீறுங்
கமழ்கடாக் களிற்று வேந்தே. 32.

கண் சுடர் கனல - கண்கள் நெருப்பைச் சிந்த, சீறும் - கோபிக்கும், கமழ் கடாம் களிற்று வேந்தே - மணம்வீசும் மதஜலத்தோடு கூடிய யானேப்படையை உடைய மன்னனே, தண் சுடர்க்கடவுள் போல - குளிர்ந்த ஒளியையுடைய சந்திரனைப் போல, தாரகைக் குழாங்கள் தாமே - நட்சத்திரக்கூட்டங்கள் தாமாகவே, விண்சுடர் விளக்கம் ஆக - ஆகாயத்தில் பிரகாசிக்கும் விளக்குகள் என்னும்படி, விளங்கல - ஒளிசெய்யமாட்டா, (அவ்வாறே) மண்வரைப்பின் - இம்மண்ணுலகத்தில், வேந்தர்போல - அரசரைப் போல, சுடர்மிக்க மக்களும் - புகழ்மிகுந்த மக்களும், இல்லை - அரசரைத் தவிர்த்து வேறெவரும் இலர்; கண்டாய் - இதனை நீ அறிவாயாக.

தாமே பிரகாசிக்காது சந்திரன் ஒளியாலே சிறிது விளங்கும் நட்சத்திரங்களேப்போல உலகத்தில் சிறிது புகழால் விளங்கும் மக்கள் பலர் இருப்பினும், அரசனாலே அவர்கள் விளங்குதலன்றி அவனைப்போலத் தாமே தனித்து விளங்கமாட்டார் என்றவாறும்.

---

270. அருந்தவம் அரச பாரம்
இரண்டுமே யரிய; தம்மை
வருந்தியு முயிரை யோம்பி
மனத்தினை வணக்கல் வேண்டும்;
திருந்திய விரண்டுந் தத்தஞ்
செய்கையிற் றிரியு மாயின்
பெருந்துயர் விளைக்கும் அன்றே,
பிறங்குதார் நிறங்கொள் வேலோய். 33.

பிறங்குதார் நிறம்கொள் - விளங்கும் பூமாலையை மார்பில் அணிந்த, வேலோய் - மன்னவனே, அரும் தவம் - ஆற்றுதற்கரிய தவமும், அரசபாரம் - அரசாட்சியும், இரண்டுமே அரிய - இவ்விரண்டுமே மிகவும் செய்தற்கரிய செயலாகும்; ஏனென்றால், தம்மை வருந்தியும்-தம்மைப் பல துன்பங்களுக்கும் உள்ளாக்கிக்கொண்டு உடல் வருந்தியும், உயிரை ஓம்பி - பிறவுயிர்களைப் பாதுகாத்து, மனத்தினை வணக்கல் வேண்டும் - தங்கள் மனத்தையும் அதினிஷ்டப்படி போகவொட்டாமல் தடுத்து அடக்கியாளவேண்டும். திருந்திய இரண்டும் - செவ்விதாய் நடைபெற வேண்டிய இவ்விரண்டும், தம்தம் செய்கையின் திரியும் ஆயின்-தத்தம் செயல்முறைமைக்கு ஏற்ற தொழில்களினின்று பிறழுமாயின், பெரும் துயர் விளைக்கும் - மிக்க தீங்கினை விளைக்கும். (அன்று. ஏ.)

---

271. அந்தரந் திரியுஞ் செய்கை
யமரர்தம் மரசு வேண்டி
இந்திர வுலகங் காணும்
நெறியவை யாவை யென்னின்,
மந்திரம் வழாத வாய்மை
மாதவ முயறல், அன்றேல்
தந்திரந் தழுவிச் செங்கோல்
தளர்விலன் தாங்கல் என்றான். 34.

அந்தரம் திரியும் செய்கை - ஆகாயத்திற் சஞ்சரிக்கும் செயல்வன்மையை உடைய, அமரர்தம் அரசு - தேவர்களை ஆளும் அரசாட்சியை, வேண்டி-விரும்பி, இந்திரன் உலகம் காணும் - இந்திரன் ஆளும் பொன்னுலகத்தைச் சேரும், நெறி அவை யாவை என்னின்-வழிகள் எவை என்று கேட்பாயாயின், மந்திரம் வழாத வாய்மை மாதவம் முயல்தல் - மந்திரங்களைப் போல் நினைத்தபயனைத் தவறுதளிக்கவல்ல சாபானுக்கிரக ஆற்றலைத் தரத்தக்க பெருந்தவத்தைச் செய்தலும், அன்றேல் - அல்லது, தந்திரம் தழுவி - மந்திரிகளின் சூழ்ச்சியைத் தழுவி, செங்கோல் - மனுநீதி தவறாத அரசாட்சியை, தளர்விலன் தாங்கல்-தளர்ச்சியின்றிச் சரிவர நடத்தல் (ஆகிய இவ்விரண்டுமே), என்றான் - என்று உரைத்தான்.

விண்ணுலகத்தைப் பெற்று வானவர்க் கரசனாய் வீற்றிருக்கும் உபாயம், நல்ல தவஞ் செய்தல், அன்றேல் இவ்வுலகத்தில் நீதி தவறாத செங்கோல் மன்னனாய் அரசு புரிதல், ஆகிய இவ்விரண்டே என்றான் என்க. வாய்மை - நிறைமொழி, நினைத்த பயனைத் தடையின்றிப் பயந்தேவிடும் சாப அனுக்கிரக மொழிகள். தந்திரம் - யுக்தி, சூழ்ச்சி, ஆலோசனை.

---

272. மரந்தலை யிணங்கி வான்றோய்
மணிவளர் வயிரக் குன்றம்
உரந்தன குழும வேந்தி
உய்த்திடு மொருவர்க் கேனும்
அருந்தவம் அரச பாரம்
அவைபொறை யரிது கண்டாய்
இரந்தவர்க் கீட்டப் பட்ட
இருநிதிக் கிழவ, என்றான். 35.

இரந்தவர்க்கு-யாசித்தவர்களுக்குக் கொடுப்பதின் பொருட்டு, ஈட்டப்பட்ட - சம்பாதிக்கப்பட்ட, இருநிதிக்கிழவ - பெருஞ் செல்வத்தை உடையமன்னனே, மரம் தலை இணங்கி-மரங்கள் மேலே நெருங்கி, வான் தோய் - ஆகாயத்தை அளாவும், மணிவளர் வயிரக் குன்றம்-காந்தி மிக்க வயிரமலைகள், உரந்தன குழுமவன்மையையுடையவைகள்பலசேர, ஏந்திஉய்த்திடும்-தூக்கி எறியவல்ல, ஒருவர்க்கேனும் - பெரும் பலம் பொருந்திய ஒருவனுக்கும், அருந்தவம் அரசபாரம் அவை - அருந்தவமும் அரசாட்சியை வகித்தலும் ஆகிய அவைகளை, பொறை-தாங்கல், அரிது கண்டாய் - அரியதென்பதைநீ அறிவாயாக, என்றான் - என்று கூறினன்.

உரம் - வன்மை. பொறை - பொறுத்தல், தாங்கல்.

---

273. உரிதனி னொருவன் செய்த
ஊழ்வினை யுதயஞ் செய்து
விரிதலி னதன துண்மை
விளங்கினாற் போல வேந்தர்

கருதிய கருமஞ் சூழ்ச்சிப்
பயத்தினாற் கருதும் வண்ணம்;
எரிதவழ்ந் திலங்கு வேலோய்
எண்ணுவ தென்னை? என்றான் 36.

எரி தவழ்ந்து இலங்கு வேலோய்-நெருப் பெழுந்து ளங்கும் வேலையேந்திய மன்னா, ஒருவன் செய்த ழ்வினை - ஒருவன் முற்பிறப்பிற் செய்தவினை, உரினின் - இப்பிறப்பில்அவனெடுத்த உடலினிடத்தே, தயம் செய்து-தோன்றி, விரிதலின் - வளர்ந்து தன் பனை ஊட்டுவித்தலின், அதனது உண்மை விளங் றற்போல - அப்பழவினையினுண்மை வெளிப்படு து போல, வேந்தர் - அரசர்கள், கருதிய கருமம்- ரம் செய்ய நினைக்கும் காரியங்களை, சூழ்ச்சி பயத்தி)ல் - மந்திரிகளின் ஆலோசனைமுடிவால், கருதும் ண்ணம் எண்ணுவது - துணியும் விதத்தை நினைப் து, என்னை - எதற்காக; என்றான் - என்று சொன்)ன்.

உரி - தோல், (ஆகுபெயர்) உடல்.

---

274. பஞ்சிநன் றூட்டப் பட்ட
மாதுளம் பருவ வித்து
மஞ்சினின் றகன்ற சாகை
மலரிடை வடிவு காட்டும்;
அஞ்சிநின் றனலும் வேலோய்,
சூழ்ச்சியும் அன்ன தேயால்,
வெஞ்சொலொன் றுரைக்க மாட்டா
விடுசுடர் விளங்கு பூணேய். 37.

பஞ்சி நன்று ஊட்டப்பட்ட - செம்பஞ்சுக்குழம்பைநன்றாகப்பூசினாற்போல மிகவுஞ் செந்நிறம்பொருந்திய, மாதுளம் பருவ வித்து - மாதுளம் பழத்தின் விதை, மஞ்சின் நின்று அகன்ற சாகை மலரிடை - மேகத்தினின்று விலகிய கிளையிலுள்ள அந்த மாதுள மலரினிடத்திலேயே, வடிவு காட்டும்-தனது நிறத்தை முந்தியே காட்டும். வெஞ்சொல் ஒன்று உரைக்க மாட்டா - கடிய சொல்லொன்றையும் சொல்லமாட்டாத, அஞ்சி நின்று அனலும் வேலோய் - பகைவர் அஞ்சும்படி நெருப்பெரியும் வேலையும், விடுசுடர் விளங்கு பூணேய் - வீசுகின்ற காந்தியோடு விளங்கும் ஆபரணங்களையும் ஏந்திய மன்ன, சூழ்ச்சியும் - ஆலோசனையும், அன்னதே-அத்தன்மையதே ஆகும். (ஆல், அசை).

இனி விளையும் மாதுளம்பழத்தின் நிறம் முந்தியே அதன் மலரிடத்து விளங்குவதுபோல, ஒருவன் செய்யப் புகுந்த காரியத்தின் பயன் முந்தியே ஒருவாறு அவனுடைய ஆலோசனையிலேயே தோன்றும். என்றவாறு.

வடிவு - நிறம்.

நவராத்திரி

[ஓர் நாடகம்]

[510-வது பக்கத் தொடர்ச்சி]

[ராஜீயா இடப்புறத்திலிருந்து வருகிறாள்]

ராஜீ:—நீ நகரமாட்டேனென்றால் பின் அப்பாவை)ங்கு வரச்சொல்கிறேன்—

தியா:—வந்து ஒரு பயனுமில்லை...ஆமாம்! ராஜீயா, ன்று கேட்கிறேன்—நிஜத்தைச் சொல்.

ராஜீ:—சொன்னால், வருகிறாயா அப்பாவிடம்!

தியா:—ஆகட்டும்! தேர்தலுக்கு உன் தந்தை இது)ரை எத்தனை செலவழித்திருக்கிறார், தெரியுமா?

ராஜீ:—செக்குக்களின் கௌண்டர்பாயிலைக் கூட் ச் சொன்னார்-7413 ரூபாய் ஆகியிருக்கிறது!

தியா:—உன்சமர்த்தேசமர்த்து! இத்தனைத்தொகை தற்கு?

ராஜீ:—இரண்டு ஜில்லாக்களல்லவா?

தியா:—லஞ்சம் தரத்தானே இந்தச்செலவு!

ராஜீ:—(சிரித்துக்கொண்டு) சீ! மோட்டார்ச் செலவு; ஜண்டுகள் எத்தனைபேர்!

தியா:—நீ சிரிக்கிறதிலிருந்து தெரியவில்லையா?... ள்ளுக்கு எத்தனை திட்டம்?

ராஜீ:—கள்ளா? என்காதில் விழவில்லையே...

தியா:—என்னென்ன விழுந்தது உன்காதில்சொல்.

ராஜீ:—அரக்குக்குச் செலவு...

தியா:—எத்தனை சொல்!

ராஜீ:—அதிகந்தான்—ஈராயிர ரூபாயாம். ஒருரூபா க்கு 12 குச்சிகள் அடங்கிய பெட்டி கிடைக்கையில் ஈராயிர ரூபாய்க்கு அரக்குவாங்கித் தபாலில் ஒவ்வொருவருக்கும் இன்ஷியூர் செய்தனுப்ப வேண்டும் என்றால் எவ்வளவு பணம் பிடிக்கும் தேர்தலுக்கு! பார்! வோட்டர்கள் பத்தாயிரம் பேராம்...நீ வந்து, ஒரு பைசா செலவில்லாமல் முடித்துவைக்கிறேன் என்று ஆசைகாட்டினதல்லாமல் காரியத்தில் இறங்கத் தயங்குகிறாய்!

தியா:—நானா தயங்குகிறேன்; ஒரு வார்த்தை போதுமே—உன் தந்தை ஒப்பினால்-ஆனால் உள்ளூற, மனமொப்பி—காந்தியை ஏமாற்றினார் சில கசடர்கள் கயவர்கள்—அதுபோல் தேசபந்துவையும் ஏமாற்ற முயலக்கூடாது-தேர்தல் முடிந்ததும் கட்சிநீங்கிக் கவர்னரிடம் சலாம் போட! சொல்லிவிடு சலாம்! போ!...

ராஜீ:—எனது தந்தையைக் கசடர் கயவர் என்று நீ வைகின்றாயா; அதையும் போய்ச் சொல்கிறேன் பார்!

தியா:—(சிரித்துக்கொண்டு) இரு-கொஞ்சம்—நான் யாரைச்சொல்கிறேன் தெரியுமா? அவன் உள்ளே போயிருக்கிறான்—வருவான்-பார் வேடிக்கை காட்டுகிறேன் உனக்கு! (சைகிலை நிறுத்த)

ராஜீ:—போய்! நான் போகவேண்டும்...வீடு.

ஒரு குரல்:—குஞ்சு! குஞ்சு...

தியா:—பொன்னி குரல்போ லிருக்கிறதே...குஞ்சுவை ஏமாற்றவோ—

[குஞ்சு சுபத்திரை தொடர ஓடிவருகிறாள்]

சுப:—உனக்குச் சரியாய் நான் ஓட முடியாதம்மா! ஓடவுங்கூடாதம்மா!! (சிரிக்கிறாள்)

குஞ்:—அம்மாகுரல் அப்போ அங்கே கேட்டது, இப்போ இங்கே கேட்டது—நீதானு அம்மா, இன்று ஊரிலிருந்து வந்திருக்கிறாய்!

ராஜீ:—வரகின்றாயா, சைகிளில் ஏறிப்போகலாம்! முன்னே பார்த்திரோ நான் அக்பரைச் சைகிளில் கொண்டு போனதை? இவளையும் தூக்கிச் செல்கிறேன்; பார்!

தியா:—அக்பரைப் போட்டாதுபோல், இவளையும் கீழே போடவா?

சுப:—அவள்கையில் கொடுக்கலாமோ? வா அம்மா குஞ்சு.

ராஜீ:—நான் போய் அவர்களை அழைத்துவருகிறேன். (வலப்புறத்தில் மறைகிறாள்)

தியா:-பிழைதான், ஆனால், குற்றம் என்மேலில்லை. (சிரிக்க)

சுப:—பின் யார்மேல்? ஐயோ, தலைமயிரிப்படியா இருக்கும்? வா, எண்ணெய் தடவி, வாரிப் பின்னுகிறேன்.

ஒருகுரல்:—குஞ்சு! குஞ்சு!!

சுப:—கீச்சுக்குரல்-பொன்னி குரல்போல்! வஞ்சக் குரல்!

தியா:—ஆம், இவளை மயக்க! நீ இவளை உனது வீட்டுக்குக் கொண்டுபோய்விடு; இந்தச் சாமியார் கையிலிருந்து தப்பும் வழி இதுவே...

குஞ்:—வருகிறேன்; அம்மாவைக் காட்டுகிறாயா அங்கே? அங்கே இருக்கிறாளா?

சுப:—காட்டுகிறேன்!

தியா:—பொய் சொல்வானேன்; நான்தான் அம்மா என்று நீயே சொன்னாயே—போய்த் தலைபின்னிக் கொண்டுவா—அதற்குள் நான் புடவையுடுத்தி முன்னைய அம்மாபோ லிருக்கிறேன்.

குஞ்:—சரி வா வா! (சுபத்திரையைப் பிடித்திழுக்க)

தியா:—சீக்கிரம்! சீக்கிரம்!! கிடுகிடென! மோட்டாரில்ஏற்றிக்கொண்டு போய்விடட்டுமா? வாருங்கள்! என்ன சத்தம்-டக் கென்றதே மோட்டாரருகே!

சுப:—மோட்டார் ஓட்டவும் தெரியுமா?

குஞ்:—என்னை இடுப்பில் எடுத்துக்கொள்!

சுப:—அப்படிவா—(எடுத்துக்கொண்டு) அப்படி—என்னைக் கண்டால் இனிப் பயந்தோட மாட்டாயே!

தியா:—மோட்டார் ஓட்டுவது ஒரு பெரும் வித்தையா! வாருங்கள்!...என்னடா—டே, யாரங்கே... மாயாண்டியா?

மாயா:—ஆமாங்க—

தியா:—என்னடா, கீழே, ஊறுகிறது சுனை! பெட்ரோல் நாற்றம்!—பான்னட்டை ஏன் எடுத்தாய், பூனைபோல் மூடுகிறாய்?

[இடப்புறத்தில் மறைகிறான்]

சுப:—வா, போகலாம்!... (மறைகையில்)

[தியாகுவின் குரல்]

தியா:—இனி மோட்டார் செல்லாது. இந்த மடையன் செய்த விஷமம்! நடந்தே போங்கள்-நானிங்குத் தங்கி, செய்வன செய்கிறேன்.

[சுபத்திரையும் குஞ்சுவும் மறைகிறார்கள்]

[மாயாண்டி இடப்புறத்திலிருந்து வருகிறான்]

மாயா:—சாமி, என்னைக் காட்டிக்கொடுக்க வேண்டாம்!

தியா:—(தோன்றி) ஏன் நோண்டினாய் யந்திரத்தை!

மாயா:—உருமபிள்ளை இதை ஒரு மிருகம்,கிட்டே போனால் கடிக்கும் என்று என்னென்னவோ சொன்னான்-எனக்கு நம்பிக்கைவரவில்லை—பின்னே,சோதித்துப் பார்க்கலாம் என்று......

தியா:—நல்லவேளை, வேறு எதையாவது தீண்டி நோண்டி யிருந்தாயோ, மாண்டிருப்பாய்......

மாயா:—அவர் வந்தால் கோவிப்பாரே-என்ன செய்வேன்! ஐயோ, நான் ஊருக்குப் போய்விடட்டுமா?

தியா:—வீட்டில் சொல்லிக்கொள்ளாமலா?

மாயா:-உங்களிடந்தான் சொல்லிக்கொள்கிறேனே இப்போ, போதாதா?

தியா:—(சிரித்து) நான் இவ்வீட்டுக்காரனல்லவே-அம்மாவிடமோ ஐயரிடமோ சொல்லிக்கொள்!

மாயா:—சாமி—மன்னியுங்கள் — உங்களிஷ்டம் போல் செய்கிறேன், நாணயச் சங்கம் சேர்கிறேன்—ராப்பள்ளிக்கூடம் போகிறேன்—வீரானையும் மஞ்சனையும் ஊர்ப் பள்ளிக்கூடத்துக் கனுப்புகிறேன்—கள்ளுக்கடை பக்கம் போவதில்லை.

தியா:—அப்புறம்...மேலே? (சிரிக்கிறான்) ஊரில் நடப்பதெல்லாம் தெரிந்து கொண்டே—புளுகன் நீ... சோம்பேறி நீ.........

மாயா:—இன்னும்எதுசெய்யச்சொன்னாலும் செய்கிறேன்...நான்தான் இதைச் செய்தேன் என்று... மோட்டார்காரனிடம் சொல்லிவிடவேண்டாம், பெருமுரடன்—கன்னம் கன்னமாய் அறைகிறான்என்னை.

தியா:—உன்னையா— ஏன்?—உன்னை அடித்தால் அம்மா அவனைக் கோவிப்பதில்லையா?

மாயா:—அம்மா வா! சிரிப்பார்! எனக்குப் பரிந்து பேசுவதுகிடையாது! உருமபிள்ளை படுப்பது தூங்குவது உண்பது—எல்லாம் ஆபீசுக்குப் பின்புறம்-அந்த அறையில்-நானுமிங்கேயே—சதா ஏவலும் சதா அடியும் உதையுந்தான் எனக்கு! உடம்பு இருவகைகளிலும் நோகிறது.

தியா:—அவனதிருப்பிடம் இங்கே தானே? அவன் அறையைக் காட்டு, வா!

மாயா:—அறையிலில்லையே, இங்கன்றோ அவர் போயிருக்கிறார். [போகிறான்]

(உருமபிள்ளை வந்து மோட்டாரைப் பார்க்கிறான்]

உரு:—யாரிந்த வண்டியை நோண்டினது?

தியா:—நானில்லை.

உரு:—நானில்லை என்றால்—வேறு யார்—பானட்டைத் திறந்து, வண்டி ஓடவிட்டாமல் கெடுத்திருக்கிறாயா?

தியா:—நானில்லை.

உரு:—வாய் கூசவில்லையா? யாரிடம் உன்பொய் மூட்டைகளை அவிழ்க்கிறாய்.

தியா:—மோட்டாரோட்டி, தனது மோட்டாரில் மூட்டைகளை அடுக்கித் தன்வீட்டுக்குக் கொண்டு போக!

உரு:—ஓடும்போது மோட்டார்ச் சத்தம் எப்படிக் கேட்கும்? இப்படித்தானே? டப்! டப்! டப்!டப்!

(கன்னத்தில் நாலறைகள் கொடுக்க)

தியா:—மேலே மோட்டார் நின்றுவிடுமோ அத்துடன்! இன்னும் போகாதா—நாலு சுற்றுத்தானு? (சிரிக்கிறான்)

உரு:—நாலுமைல் தூரம் போகவைக்கட்டுமா?...

தியா:—நானூறுமைலும் உதைபடத் தயார்—வா, மெய்யனது மெய்—உடல்! ஆம், உண்மை குடிகொண்ட இவ்வுடல் தாங்கும்-உனது மோட்டார் என்மேல் ஏறிக் கொல்லாது—

உரு:—பெட்ரோலை எல்லாம் கீழேகொட்டிவிட்டு-மோட்டார்,காலி டப்பாவில்போகும் நாலாயிரம்மைல்! இல்லாவிட்டால், இன்னும் அறைகள் உன் கன்னத்தைக் கமலமாய் மலர்த்தி, கண்களைக் கோவையாய்க் கனிவித்து...! பான்னட்டை எடுத்து என்னதான் செய்தாய் சொல்—மோட்டாரை அவசரமாய்ச்செப்பனிடவேண்டும்; சாமியார் காக்கலாகாது-எதை நோண்டினாய், சொல்.

தியா:—நானறியேன்—உனக்குப் புத்தியிருக்குமாயின் ஊகித்துக்கொள்! எங்கே?

உரு:—பின் யாரறிவர்? உன் கைகளை வெட்டுகிறேன் பார் (மேலங்கியை அவிழ்த்துப் பூஞ்செடியில் மாட்டிவிட்டு)

தியா:—என் கையை வெட்டிவிட்டு, நாமிருவரும்-போரிடுவதே பண்டைய வீரரின் வீரமுறை—நான் பதிலறையக் கூடாது, என்கையை முதலில் வெட்டு, வா—உன் வாளை உருவு!

உரு:—பதிலறைபவனு நீ—எங்கே?

தியா:—வா! காந்தீயம் போதுமினி...ஆம், இதோ உண்மைக்காந்தீயம் (தனதுகுல்லாவைச் செடியில்மாட்டி) வா,—

உரு:—சாமியார் வருகிறார்—

தியா:—அவரையும் உன்பக்கம் சேர்த்துக்கொள்ளேன்.

(துரைசிங்கனும் காமுவும் வருகின்றனர்)

உரு:—அதோ இருவரும்—மோட்டாரைப் பார்க்கிறேன் போய்....... [இடப்புறத்தில் மறைகிறான்]

காமா:—எங்கே அவ்விருவரும்? —அவர்களைத் தானே கூப்பிட்டாய்?

தியா:—யாரிருவரை?

காமா:—சுபத்திரை எங்கே? குஞ்சு எங்கே? இங்கிருந்தனரே—

குரல்:—அவன் அதுவும் அறியான், எதுவும் அறியான்!-கார்படரேட்டரைப்பிடுங்கி, பெட்ரோலைவீணாக்கி...

தியா:—என்மேல் ஏன் பழிபோடுகிறாய்? அறிந்து பேசு!

காமா:—நீதானே இங்கிருக்கிறாய்—குஞ்சு எங்கே? சுபத்திரையிடம் விட்டுவிட்டுப் போனேனே! சுபத்திரை எங்கே? சாமியாரே! நிற்கிறீர்களே-அங்குவாருங்கள்—போய்உட்காருங்கள் இதோஇந்தக்குருச்சியில்!

துரை:—(உட்கார்ந்து) உருமபிள்ளை, அந்தப் பொம்மையைக்கொண்டுவா; குழந்தை வருமுன் மந்திரித்து வைக்கிறேன்.

குரல்:—பழைய பொம்மை போதாதோ! நான் என் வீட்டிற்கு கொண்டுபோகவேண்டும்என்றிருக்கிறேன்-என்மகளுக்குவேண்டாமோ! பழையதையே திருப்பிக் கொண்டுவரச்சொல்லுங்கள்!மீண்டும்மந்திரிக்கலாமே!

காமா:—சுபத்திரா! சுபத்திரா! குஞ்சு!

குரல்:—நான் சொல்லட்டுமா இருப்பிடத்தை?

காமா:—எங்கே? என் தொண்டை கம்மிக் கிழிகின்றது - அயர்கிறேன்.

உரு:—இந்தத் திருடன் மோட்டார்எந்திர நுட்பமறிந்தவன்—இருவரையும் எங்கேயோ மோட்டாரில் கொண்டுபோய் ஒளித்துவைத்துவிட்டு மீண்டும்மோட்டாரை இங்குக் கொணர்ந்து நாம் வேகமாய்ப் பின்தொடர்ந்து பிடித்துவிடாதபடி, கார்பரட்டரைப்பிடுங்கிவிட்டு, நிற்கிறானங்கே, குறவன்!

தியா:—(சிரித்துக்கொண்டு) இருகாதும் கொடுத்துக் கேளுங்கள் பாட்டி—சாமியாரே நீங்களும்!

காமா:—ஐயையோ! குஞ்சுவை இழுத்துப் போகவே வந்தேன் என்றாய்-எங்கு ஒளித்து வைத்தாய்—சொல். அவள் புத்தி நேராக்கிவிட்டதும்,—சாமியாரகைஷ கட்டினபிறகு உன் மனம்போல் செய்யேன்!

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 4. நகர்நீங்கு படலம்.

[516-வது பக்கத் தொடர்ச்சி]

தனக்கென முனியாத் தனிப்பெருந் தகையோன்

தானவர் தானையொடு தன்னையும் இரிதரத் திரித்த

இராமனது சின உண்மையை இராவணன் சிறிதும்காண்பானல்லன். இலக்குவன் தன்மையோ அவ்வகைத்தன்று. முன் கோசிகன் வேள்வியைக் காத்து நின்றநாள், தாடகைமைந்தரோடு வானகம்வந்து துன்னிய அரகரீட்டத்தை இராகவன், "நம் கணைகளுக்கு இலக்காகி மாய்பவர் இவர்" என இலக்குவற்குக் காட்டலும்,

கண்டவக் குமரனுங் கடைக்கண் தீயுக
விண்டனை நோக்கித்தன் வில்லை நோக்கினன்

ஆதலின், முனிவு முண்டு தன் தம்பியின் திறத்தில் என்பதனை இராமபிரான் அறிந்திருத்தல் வேண்டும். எனினும், "இறையேனும் முனிந்திலாதாய்," என்றும், "சீற்றம் விளையாத நிலத்தனக்கு எங்ஙன் விளைந்தது" என்றும் இராகவன் இங்குப் பகர்ந்தமாற்றங்க ளிவைகளைப் பொய்யென எவருங் கொள்ளார். நாழிகைக்கணக்கிலன்றிவயதளவில் இவ்விருவருக்கும் அகன்றவேற்றுமை இருந்ததில்லையேனும், இராமனே இலக்குவனைஎப்பொழுதும் தன்னின்மிக்க இளையவன் போன்றே பாவித்து நடத்துகின்றான். குழந்தையே போல் கொண்டாடுகின்றான் என்றாலும் பொருத்தமுடையதாகும். கண்கலங்கிக் கலுழ்கின்றவோர் மகவினைக், "குழந்தாய், நீ என்றும் அழுவதில்லையே, அப்பா, நீ அழமாட்டாயே, நீ சமத்தாயிற்றே" என்று தேற்றுவாரென்ன, இவ்வயின் இராமன் இளையோனை ஆற்றுமொழிகளும் இயற்கையாகின்றன. இலக்குவனே இளஞ்சிறானல்லன். இவ்வாறு தான், யுத்த சன்னத்தனைத் தனுவேந்தி வெகுண்டு நிற்றற்கு யாதும் ஏது இலதென்பான்போல் தணிந்துரைக்கும் இராமனைச் சிறிது பரிகசிக்கவும் வல்லன். "இராம

சீறுதற் கொத்தவோர் செவ்வியன்றே விது ; இஃ தல்லதாயின், வேறென்று கற்பிக்க வல்லாய்கொல்" எனப் பணிவுடன் வினவுவான் போன்றதோர் போலி வினயத்தனாயினன். எனின்,

நீண்டானதுரைத்தனுகித்திலந்தோன்றநக்குச்
சேண்டான்றொடர்மாநிலநின்னதென்றுந்தைசெப்
பூண்டாய்பகையாலிழந்தேவனம்போதியென்றால்
யாண்டோவடியேற்கினச்சீற்றமடுப்பதென்றான்.

[இராமன் அவ்வாறு உரைக்கவும் இலக்குவன், முத்துக் கள்போன்ற தன் பற்கள் தோன்றச் சிரித்து. அகன்று பரந்திருக்கும் இவ்விராச்சியம் உன்னுடையது' என்று உன் தந்தை அளிக்க, (அவ்வரசினை நீ பூணுமுன்) சிற்றன்னையின் பகையினைப் பூண்டாய். அதனால் அரசினை இழந்து வனம் ஏகுகின்றாய், என்றால், இப்பொழுது அல்லாது வேறெப் பொழுதோ அடியேன் கோபங்கொள்வது அடுக்கும் என்று கூறுவாய்—என்றான்]

கோபமும் ஒருபோது அடுக்குமென்னுங் கொள்கை அடியுடன் கடியத்தக்கது மன்று. தனக்கொருவர் தீங்கிழைத்தாரென்னக் கதங்கொண்டு வெதும்புதல் கயமை. மற்றுப் பிறர் பிறர்க்குச் செய்யும் தீமையை ஆற்றுமற் சீறுவது மாநுட மாண்பினை முற்றிலுஞ் சிதைத்துவிடுமென்று செப்புதற்கில்லை. இப் பின்வகையைத் தாமஸ் கார்லைல் (Thomas Carlyle) என்னும் ஆங்கிலப்புலமையோர், "செம்மைசேர் சீற்றம்" (Righteous indignation) என்றழைப்பார். தன்பொருட்டுகனன்று முனிபவர் கயவர்; பிறர் பொருட்டு முனியாதார், நன்ஞான முனிவரல்லரேல், மனிதரல்லர். இலக்குவப்பெருந்தகை எஞ்ஞான்றுந் தன்பொருட்டு முனிந்திலன். பிற்றைநாள், மாய மானாய்ப்போந்த மாரீசனது வஞ்சனைக்குரலால், வெருவிய சீதை,விரைந்து துணைசெயற் கேகாது தன்னயலே நின்ற இலக்குவனை நோக்கி,

"கெட்டவரே, கருணையற்றவரே, கொடியவரே, குடிகேடரே, இராமருக்கு இப்போது நேரிட்ட பெருந்தீங்கு உமக்குச் சம்மதம்போலும். ஆகையாற்றான், அவருக்குத் தீங்கு வந்துவிட்டதென்பது தெரிந்தும் நீர் இவ்வாறு பேசுகிறீர். குரூர குணமும் கெட்ட எண்ணமுமுடைய சத்துருவாகிய உம்மிடத்தில் இவ்விதமான கொடிய சங்கை காணப்படுவது ஆச்சரியமன்று. நீர் தனியே இராமருக்குத் துணையாக வருவதுபோல் எனக்காகவே காட்டுக்கு வந்திருக்கிறீர். அல்லது இவ்வாறு செய்யப் பரதர் உம்மை இரகசியமாக ஏவியிருக்கலாம். ஆனால், அவ்வாறு நீராவது பரதராவது கொண்டகருத்து நிறைவேறப்போகிறதில்லை. நீர் அவருக்குச் சகோதர உருவமாகிய சத்துருப்போலும். என் நிமித்தம் நீர் இராகவர் காட்டில் மாண்டுபோகட்டும் என்றிருக்கிறீரோ. என்மேல் வைத்த ஆசையால்தான் நீர் இராகவரைத் தேடிச் செல்லவில்லை. குவளை நிறமும் தாமரை இதழ் போன்ற கண்களுமுடைய இராகவரைக் கணவராகப் பெற்ற நான் மற்றொரு புருஷனைக் கருதுவேனோ? இராகவரையன்றி மற்றொரு புருஷனை நான் தொடவும் மாட்டேன்"

என்று வான்மீகத்தில் வெச்சென வழங்கிய கடுஞ் சொற்களல்லவாயினும், தைக்கின்றகூர்மையிற் குறையா இங்கிதமுகத்தால், கம்பர் நூலிலும்,

குற்றம் வீந்த குணத்தினெங் கோமகன்
மற்றை வாளரக் கன்புரி மாயையால்
இற்று வீழ்ந்தன னென்னவு மென்னயல்
நிற்றி யோவிளை யோயொரு நீயென்றாள்.

[குற்றமற்ற குணங்களையுடைய எம் தலைமகன், கொடிய அரக்கன் புரிந்த மாயையால் தளர்ந்து விழுந்தனன் என்ற பின்பும், இளையோய், என் அயலிலே நிற்கின்றாயோ, ஒருவன் நீ—என்றாள்]

நாடுஞ் செல்வமும் கோதெனக் கழித்துக் காட்டகத்தே பதின்மூன்று வருடங்கள் கண்ணும் இமைத்தலின்றிக் காத்துத் தொழும்பனாய்ப் பணிவிடை புரிந்துவந்த மைத்துனனை இவ்வண்ணங் கழறிய நிந்தனை எத்துணைப் பெரியதென் றியம்பல் வேண்டுமோ. வான்மீகத்தின்கண் வரும் இலக்குவன்,

"ஓ மைதிலி, நீர் இவ்வாறு அநுசிதமாகப் பேசினது ஆச்சரியமன்று. இது இவ்வுலகத்தினுள்ள மாதர்கள் இயல்பு.........நான் நியாயத்தைச் சொல்ல நீர் அந்நியாயமாக என்னை இக்கொடிய வார்த்தைகளைப் பேசினீர். இயற்கையாகவே பெண்களின் தன்மை கெட்டது. சீ! நீர் கெட்டீர். இனி நான் இராகவர் இருக்கிற இடம் போகிறேன்...........நீர் சொன்ன இச் சொல்லை நான் பொறுக்கமாட்டேன்.........நீர் வருத்தத்தை அடையப்போகிறீர்"

என்று, பழித்தும் வைதும் ஒருவாறு சபித்தும் தன் ஆற்றாமையுடன் வெகுளியை விளம்பினனாயினும், கம்பரின் கைகளினின்று தனக்குரிய குணங்களைப் பெற்றுக்கொண்ட இலக்குவனோ, தன் பொருட்டு வெகுளும் தன்மையனல்லனாதலின், பொங்கெரிப் புகுந்து மாய்வளெனக் கானகத்தீயினைக் கருதுவாள் தன் தாமரைமலரனைய தாள்களுக் கெதிருறத் தரையிடை வீழ்ந்து பணிந்து,

துஞ்சுவ தென்னைநீர் சொற்ற சொல்லைபான்
அஞ்சுவென் மறுக்கிலெ னவலந் தீர்ந்தினி
இஞ்சிரு மடியனே னேகு கின்றனென்
வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ

[நீர் எரிமூழ்கி இறக்கவேண்டுவதேன். நீர் சொன்ன சொற்களைநான் (நினைக்குந்தோறும்)அஞ்சுகின்றேன்.உமது கட்டளையை இனி மறுக்கமாட்டேன். அவலம் தீர்ந்து நீர் இங்கு இரும். அடியேன் செல்கின்றேன். கொடிய கோபமுடைய விதியை வெல்லக்கூடியவர்களோநாம்—அல்லரே]

என்று உளைந்த மனமல்லாமல் உறுத்த சீற்றம் யாதுமின்றி இயம்பினன். தன்வயின் இழைத்த தீமைக்கு ஓர் அமைதியும் பிறர்பால் புரிந்த தீமைக்கு வேறோர் வன்மமும் இலக்குமணன் திறத்தில் காணற்கு மீண்டுமிச் செவ்வியே மற்றொரு விதத்தில் உதவவல்லதாகின்றது. அடாத சொற்களால் தன்னை அறப்பழித்த இக் கொடுமைக்கும், பெண்ணுட்ட மொட்டேனினியிப் பேருலகத்திலென்னாப் பொங்குதலின்றி "வெஞ்சின விதியினை வெல்ல வல்லே மல்லேம்' என்னுங் கொள்கையில் அடங்கிய இக்குரிசில் முன்னே குறித்த விதிக்கு விதியாகுந்தன் விற்றொழில் ஆற்றலின் கொள்கை யாதெனக் கருதுவோம்.

'யாண்டோ அடியேற்கினிச் சீற்றம்' அடுப்பதெனப் பரிவினோடும் பரிகசித்து,

நின்கட் பரிவில்லவர் நீள்வனத் துன்னை நீக்கப்
புன்கட் பொறியாக்கை பொறுத்துயிர் போற்று கேனோ
வென்கட் புலமுன்னுனக் கீந்துவைத் தில்லை யென்ற
வன்கட் புலந்தாங்கிய மன்னவன் போல வென்றான்

[என் கண்முன் உனக்கு அரசினைக் கொடுத்துப் பிறகு இல்லை யென்ற கொடிய புத்தியுடைய அரசன்போல, உன்னிடத்து அன்பில்லாதவர் நீண்ட காட்டில் உன்னை

யனுப்ப, (அதனைப் பார்த்தும் சகிக்கின்ற) என் அற்பமான கண்பொறியுடைய இவ்வுடலைத் தாங்கி என் உயிரைக் காப்பாற்றுவேனோ—என்றான் இலக்குவன்]

இதனைக் கேட்ட இராகவன், பிறர் தீமையைத் தனதாக்கிக்கொண்டு அவர்தமைக் காக்கும் பெருந்தகையாதலின்,

பின்குற்றமன்னும்பயக்கும்மரசென்றல்பேணேன்
முன்கொற்றமன்னன்முடிகொள்ளெனக்கொள்ளமுண்ட
தென்குற்றமன்றேவிகன்மன்னவன்குற்றம்யாதோ
மின்குற்றொளிரும்வெயிநீக்கொடமைந்தவேலோய்

[மின்னலைப்போல் பிரகாசிப்பதாய், வெய்யிலும் நெருப்புங்கொண்டு அமைந்தது போன்ற வேலையுடைய இலக்குமணனே, முன், அரசன் கிரீடத்தை ஏற்றுக்கொள் என்றவுடன் அதனால், இவ்வரசு பின் அதிக குற்றமுடையதாகும் என்பதை மதியாமல், கொள்ள விரைந்த என் குற்றமன்றோ! வலிமைபொருந்திய அரசனது குற்றம் யாது!

என்று பின்னரும், ஆவதெனின் தன் குற்றமாதல் வேண்டும் அல்லாக்கால் யார் குற்றமுமன்றென வற்புறுத்துவானாய்,

நதியின் பிழையன்று நறும்புன லின்மை யற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப்பு ரந்தாள்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்த
விதியின் பிழைநீ யிதற்கென்னை வெகுண்டதென்றான்

[நீரின்றி வற்றிப்போவது நதியின் பிழையன்று. அவ்விதமே, இது, அரசன் பிழையன்று; நம்மைப் பெற்றுப் போற்றிய சிற்றன்னையின் அறிவினது பிழை அன்று; அவள் மகன் பரதனது பிழையும் அன்று; மற்று, மைந்தா, இது விதியின் பிழையேயாகும்—இதற்கு நீ வெகுள்வது ஏன்—என்றான்]

கேட்டானிளையோன்; முன்னினும் பன் மடங்கு மூண்டெழு சினத்தனாகி,

உதிக்கும்முலை யுள்ளுறு தீயென வூதை பொங்கக்
கொதிக்கும் மனமெங்ஙன மாற்றுவென்கோளி ழைத்தாள்
மதிக்கும் மதியாய்முதல் வானவர்க் கும்வ லீஇதாம்
விதிக்கும் மதியாகுமென் விற்றொழில் காண்டி யென்றான்

[பருக்கின்ற உலைக்களத்துள்ளிருக்கும் தீயைப்போல் பெருமூச்சுப் பொங்கிவர,'கொதிக்கும் என்மனத்தை எவ்வாறு ஆற்றுவேன்—பகைசெய்த கைகேசியின் சூழ்ச்சியை வீழ்த்தவல்லதோர் சூழ்ச்சியாயும், முதல்வராகிய மூன்று தேவர்களுக்கும் அடங்காத வலியுடைய விதிக்கும் ஒரு விதியாயும், இயற்றவல்ல என் வில்லின் திறத்தினைக்காண்—என்றான்]

இங்கு இராமன்பொருட்டுச் சிற்றன்னையின்பால் வெகுண்ட வெகுளி தணியாமல் விதிக்கு விதியாகும் தன் விற்றொழில் காட்டுவான் வீரவாதஞ் செய்த இலக்குவனே பின் சீதை தனக்கிழைத்த நிந்தனையை விதியின் வெலற்கரிய வலியுள் அடக்கிப் பொறுத்தனன் இவ்வண்ணலின் சிறப்பியல்பிதனை கிறுவதற்குரியவிடம் வேறொன்றும் வாய்த்துளது.

வாலியும் சுக்ரீவனும் வன்போர் புரியுமொரு போற்றலை மறைவிலிருந்த இராகவன் இலக்குவனுக்குக் காட்டிவியத்தலும், தன் தமையனது வாணாளைக்கொள்ளக் கொடுங் கூற்றுவனைக் கொணர்ந்து தருமந்தவறிய சுக்கிரீவனை வெறுத்துச் சினந்து, அவ்வெறுப்பும் சினமும், அதனுக்கு உடன்பட்ட இராமனிடத்தில் சங்கையும் தோன்ற "இப்பழிபடு செயலினால் விளைந்த இன்னல் என் உள்ளத்தில் வூன்ற உணர்வு ஒன்றும் யான் உற்றிலென். கண்கொள்ளாக் காட்சியெனக்கருளும் நீயே அதனைக் கண்டிரு", எனத் தன் முன்னவனையும் மெல்லென முனிந்து பேசினான். தானொன்று துணிய அதற்கிகலி மாறுபட நினைத்தனனாய் வகுத்துரைத்த தன் தம்பியின் வார்த்தையால் தைப்புண்டானாதலின் அவனது முனிவினை யடக்குமாறு,

அத்தாவிது கேளென வாரியன் கூறுவானிப்
பித்தாய விலங்கி னொழுக்கினைப் பேசலாமோ
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந்தார் களெல்லாம்
ஒத்தாற் பரதன்பெரி துத்தம னாதலுண்டோ

[மேன்மகனாகிய இராமன், "அப்பா, இதனைக் கேள்" என்று சொல்வான்—பைத்தியங்கொண்ட இம் மிருகங்களின் ஒழுக்கத்தை ஒன்றாக மதித்துப் பேசலாமோ. அதுவுமன்றி, எந்தத் தாயார் வயிற்றிலும் பின்பிறந்தவர்கள் எல்லாரும் தம் தமையன்மாரோடு ஒத்துவாழ்ந்தால் பிறகு பரதன் எப்படிப் பெரிதும் உத்தமனாவது கூடும்]

இராமனொடு ஒருதாய் வயிற்றில் பரதன் பிறந்தபடி இலக்குமணன் பிறக்காமற் போயினனே! தன்னுடன் ஒத்துவாழுந் தம்பி பரதனன்றி பிறரில்லையோ! எதிர்நின்ற இலக்குவன் இராமனது உதாரணத்திற்கு இலக்காகாமற் போனதேனோ! "எத்தாயர் வயிற்றினும் பின்பிறந்தார்க ளெல்லாம் ஒத்தால், நீ தான் பெரிதுத்தம னாதலுண்டோ" என்று வேண்டுமெனின் இராமனுக்கு இயம்பத்தெரியும். தன்னொடிகலினன் என்ற பான்மையால் இத்தம்பி இலக்குவனைத் தாழ்த்தவேண்டுமென்றே இவ்வாறு பரதனைப் புகழ்வான்போல் பிறிதுமொழிந்தனன். அடவித்தடமெல்லாந் தொடர்ந்தாற்றிய தன் கடமைக்குக் கைம்மாறிதுவோவென்று சுழன்ற இலக்குவன் மனத்தில் சீற்றம் சிறிது எழுந்து தோன்றினும் அவன்பால் குறைகாணாமையே இயற்கையாகும். வாலியின் உயிர் உகும்படி பகை இழைத்த தம்பியை முனிந்த இலக்குவன், இங்குத் தன் மனம் இறும்படி இயம்பிய இராமனை யாதும் வெகுண்டிலன். முன் ஜானகியின் அடாத சொற்களைப் பொறுத்ததேபோல் பின்னிங்கு அண்ணன் சொற்களையும் பொறுத்து வாளா விருந்துவிட்டான். "யாண்டோ அடியேற்குச் சீற்றம் அடுப்பது" என்ற இளையோனுக்கு "ஈண்டுஞ் சிறிது அடுக்கலாம்" என்னும் உறுதி பொருந்துமெனினும், இது தன்பொருட்டுத் தோன்றற் குரியதாதலின் அதனை எய்தினனல்லன்.

இன்னணம் இலக்குவன் பிறர்க்குற்ற தீமையை நீக்குவதெனின் விதிக்கு விதியாகும் தன்னாற்றல் என்று கூறினன்

ஆய்தந்தவ னவ்வுரை கூறலு மையநின்றான்
வாய்தந் தனகூறு தியோமறை தந்தநாவால்
நீதந்ததன்றே நெறியோர் கணிலாததீன்ற
தாய்தந்தை யென்றாலவர் மேற்சலிக் கின்றதென்னே

[இலக்குவன் ஆராய்ந்து அதனைச் சொல்லவும், இராமன் "ஐயா, வேதங்களை ஓதியுள்ள உன் நாவால் நீ இப்படிவாயில் வந்தபடி பேசலாமா. நீ இப்பொழுதுரைத்தது நல்லொழுக்க முடையவர்க்கு அடுக்காத தொன்றல்லவா. எது செய்யினும் அது செய்தவர் நம்மைப்பெற்ற தாய் தந்தையர்களென்றால், அவர்மீது கோபிப்பது ஏற்குமா]

என்று, குழந்தையைத் தட்டிக்கொடுக்கும் முறையிலேயே மறுபடி இராமன் இலக்குவனைத் தேற்றுவானுயினன்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[513-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

இடவுணர்வு

நாம் இடம் என்பதனைத் தொடர்ச்சியாய் முடிவில்லாததாய் ஒன்றாய் விளங்குவதாகக் கருதுகின்றோம். ஓர் இடத்தினை மற்றொரு இடத்தோடு வைத்து அளந்து பார்க்கின்றோம். இத்தகைய இடவுணர்வு எவ்வாறு எழுகின்றது. இடங்களை அளப்பதற்கு முன் இடங்களின் உட்பிரிவுகளை நாம் உணர்தல் வேண்டும். இவ் வேறுபாட்டுணர்வு எவ்வாறு எழுகின்றது. நம்முடலின் மேற்புறத்திலுள்ள புலனுணர்ச்சி நிலை, இடத்திற்கு இடம் வேறுபடுதல் வேண்டும். நெற்றியில் எழும் புலனுணர்ச்சி காலில் எழும் புலனுணர்ச்சியினும் வேறாக இருந்தாலன்றோ நெற்றி என்ற இடத்திலிருந்து கால் என்ற இடத்தை வேறு என்று கொள்ளுதல் கூடும். "காலைத்தொட்டாலும் ஒன்றே; நெற்றியைத் தொட்டாலும் ஒன்றே; இரண்டிற்கும் வேற்றுமையில்லை" என்றால் இடவேற்றுமையும் இல்லையாகும். இடக்குறிகள் இடத்திற்கேற்றாற்போல வெவ்வேறாக விளங்குகின்றன என முன்னரே கண்டோம். அதனால் இடவேற்றுமையை அறியமுடிகின்றது.

இடக்குறிகள் இடந்தோறும் வேறுபட்டு இருந்தால் மட்டும் போதாது. வெளிப்பொருள்களால் தாக்குண்டு கிளர்ச்சியுறுதவரையில், அவை யிருந்தாலும் ஒன்றே, இல்லாமற் போனாலும் ஒன்றே. மூக்குமுனைக்கும் வாய்க்கும் உள்ள இடநிலை வேற்றுமையை எப்போது அறிகின்றோம். தொட்டுப் பார்த்த பின்னன்றோ அவ் விடவேற்றுமை தெளிவாகப் புலனாகின்றது! தொடுவதற்குமுன் இவ்வேற்றுமை அவ்வளவு தெளிவாக விளங்குவதில்லை. தொட்ட பின்னர்த் தொடுதல் நீங்கினாலும், அவ்வேற்றுமை தெளிவாக நமது நினைவில் நிற்கின்றது.

இவ்வாறு தாக்குண்ணும்போது, வெவ்வேறு இடங்கள் தாக்குண்ணுதல் வேண்டும். உடல் முழுதும் ஒரே பொழுதில் தாக்குண்ணும்போது, இவ்விடவேற்றுமைகள் புலனாவது அருமையினும் அருமை. தண்ணீரில் உடல் முழுதும் ஒருங்கே நனையக் குளிப்பேனானால், இடக்குறிகளை வேறு பிரித்தறிய முடியவில்லை. ஒவ்வோருறுப்பும் நனையும்போது அவ்வவ்விடக்குறிகள் எழுகின்றன என்பது உண்மையே. ஆனால், இவையனைத்தும் ஒரே போதில் கிளர்ச்சியுற்றால் இவற்றை வேறு பிரித்தறிவது அருமையாகின்றது. சாலை மட்டும் நாம் நனைப்போமானால், நனைந்த இடத்திற்கும் நனையாத இடத்திற்கும் உள்ள வேற்றுமை நன்கு புலனாகிறது; இடவுணர்வும் தெளிவுபடுகின்றது. நமது காலிலேயும் இரண்டு மூன்று இடங்களில் தண்ணீர் படுமானால், முழுப்பொருளாய் விளங்கிய அந்தக் கால் என்னும் உறுப்பின் பலபிரிவுகளும் புலனாகின்றன. நாற்றப் புலனானது ஒரேபொழுதில் தனக்கேற்ற மூக்குப்பொறி முழுவதையும் தாக்குகின்றது. அப்பொறியின் சிற்சில பிரிவுகள் மட்டும் தாக்குண்டால் அன்றோ இடவேற்றுமை எழும். அவ்வாறு தாக்குண்ணாமையால் நாற்றப் புலன்வழியாக இடவேற்றுமை யறிவது அருமையாகின்றது.

நமது புலனுறுப்புக்கள் எவ்வளவுக் கெவ்வளவு நுண்ணுணர்ச்சியுடையனவாய்ப் புலவகைப் புலன்களையும் உணர்கின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு இடவுணர்வும் சிறந்து விளங்குகின்றது. கண்ணானது ஒன்றோடொன்று முரண்பட்ட வெண்மை கறுப்பு முதலிய நிறங்களையும் ஒரே பொழுதில் நேரே காணுதல் கூடும். அவ்வளவு நுண்ணுணர்ச்சியுடையது அவ்வுறுப்பு! ஆனால், காதோ, ஒலியையும் ஒலியின்மையையும் ஒருங்கே யுணர்தல் கூடுமோ? ஆதலினால் கண்வழியாக இடவேற்றுமை மற்றைய பொறிகள் வழியாகப் புலனாவதைவிட மிக நன்கு புலனாகின்றது. பொதுவகையால் இதனைக் குறித்துவைத்துக்கொள்ளலாமேயன்றி, இதனை முடிந்த முடிபாகக் கொள்வதற்கில்லை.

இயக்கவுணர்வு, இடவேற்றுமையை எளிதில்விளக்குகின்றது. இயக்கவுணர்ச்சி, எழுவதற்குத் தொடங்கிடத்தையும் முடிவிடத்தையும் வேவ்வேறாக உணரவேண்டும். தொடங்கிடத்தினின்றும் முடிவிடத்தை ஒரு பொருள் அடைகின்றபோது இடையே கழிந்த காலத்தையும் உணர்தல் வேண்டுமோம். ஆனால் நமது இயக்க வுணர்ச்சி இவ்வாறு எழக்காணோம். மிக மெல்லிய இயக்கத்தை உணரும்போதுதான், முடிவிடத்தையும் தொடங்கிடத்தையும், கழி பொழுதையும் உணர்கின்றோம். நாழிகை வட்டிலில் (Clock) உள்ள முள், 12 என்ற எண்ணில் நிற்கின்றது. பின் சென்று பார்த்தபொழுது 6 என்ற எண்ணில் நிற்கின்றது. இடைநின்ற காலத்தில் இம்முள் 12-ல் இருந்து 6 வரை அசைந்துவந்தது என முடிவுகட்டுகின்றோம். காலையில் கிழக்கில் கதிரவன் எழக்காண்கிறேன். பின் வீட்டிற்குள் நுழைந்து என் வேலையில் கண்ணும் கருத்துமாகக் காலத்தைக் கழிக்கின்றேன். இளைப்பறிக் காற்றுவாங்க மாலையில் வீட்டை விட்டு வெளியேறுகிறேன். மேற்கிலே கதிரவன் விழுவதைக் காண்கிறேன். கிழக்கிலிருந்து மேற்குப்புறமாகக் கதிரவன் இயங்கிச் சென்றான். உய்த்துணர்தற்கு முன்னரே, நாம் இயக்க வுணர்வை அறிந்திருத்தல் வேண்டுமன்றோ? இயக்க வுணர்வு எல்லோருக்கும் இயல்பாகவே ஒரு புலனாக எழுகின்றது. நாழிகை வட்டிலில் மிகச் சிறிய இமைமுள் சுற்றுவதை நேரே உற்றுப் பார்க்கிறேன்; சிறிது தாழ்த்து அதனை நேரே பார்ப்பதைவிட்டு நாழிகை வட்டிலின் வேறொரு பிரிவினைப் பார்க்கிறேன். இந்த இரண்டு காட்சிகளிலும் உள்ள வேற்றுமையை உற்றுநோக்கினால் நாம் இயக்க வுணர்வு புலனாக எழுவதனை அறிவோம். இமைமுள்ளை நேரே கண்டபோது இயக்கவுணர்வு புலனாக எழுகின்றது. தோளின்மேல் இரண்டு முள்களை, ஒன்றிற்கொன்று ஒரு விரற்கடை தொலைவில் வைக்கின்றேன். இரண்டாகத் தோன்றாமல் ஒரே

இடக்குறி தோன்றுகின்றது. அவற்றின் இடைப்பட்ட இடம் வேறாக உணரப்படவில்லை. அவற்றின் இடையே ஒரு சிறிய வரியைக் கீறுகிறேன். அப்போது அவ்விடைப்பட்ட இடம் புலனாகிறது. வரியைக் கீறுவதாக எழும் இயக்கத்தையும் அவ்வரி போகும் போக்கையும் உணர்கின்றேன். முடிவிடமும் தொடங்கிடமும் வேறு வேறு என்று முன்னர் உணர்ந்து பின்னர், இடையே கழிந்த காலத்தையும் உணர்ந்ததனாலோ, இவ்வியக்க வுணர்வு எழுந்தது. இயக்க வுணர்வு எழுவதற்குமுன், ஒரே இடக்குறி தோன்றியதால் தொடங்கிடத்தையும் முடிவிடத்தையும் ஒரேயிடமாக அன்றோ எண்ணியிருந்தேன். ஐந்து விரலையும் கண்மேல் வைத்தால், அவ்விரல்கள் ஐந்தாக உணரப்படுவதில்லை. அவ்விரல்களையே அந்த நிலையில் அசைப்போமானால், அவ்வசைவு உணரப்படுகின்றது. பொருள்களின் இயக்கத்தை யுணர்த்தும் புலன் நிலையையுணரும் புலனைவிட நுட்பமானதாய் விளங்குகின்றமையால் நிலையறி புலனிலிருந்து அசைவறிபுலன் எழுந்ததென்று சொல்வதற்கில்லை.

உயிர்கள் உயர்நிலையைப் படிப்படியாக ஏறி யடைந்துவருகையில் முதலில் அசைவின் வழியாகவே பொருள்கள் புலனாகிவந்தன. முதலில், இவ்வசைவு எழுந்தபோது உலகம் முழுதுமே அசைவதாகக் கொண்டு உணர்ந்தோம். பின்னர்த்தான் பொருள்கள் தனித்தனியே வெவ்வேறு அசைவதனை வேறுபிரித்துணர்ந்தோம். இப்போதுங் கூடச் சிற்சில போது பழைய மயக்கவுணர்வு நமக்கு வருகின்றது. இரண்டு விரல்களையும் சேர்த்துப்பிடிக்கிறேன்; பின்னர் ஒரு விரலைமட்டும் நிலை நிறுத்தி மற்றொன்றை அதினின்றும் வேறு பிரிக்கின்றேன். உண்மையில் அசைவது ஒரு விரல்மட்டுமே யானாலும், இரண்டு விரல்களும், வேறுவேறு புறமாக எதிர் எதிரே அசைந்து பிரிவதுபோலத் தோன்றுகின்றது நாம் எதையேனும் மென்று தின்னும்போது கீழ்வாய்க் கட்டை அசைகின்றதா மேல்வாய்க்கட்டை யசைகின்றதா? இரண்டும் அசைவனபோல் தோன்றுகின்றன. உண்மை யாது? கீழ்வாய்க்கட்டைமட்டுமே அசைகின்றது. இரவில்வானத்தில் வெண்டிங்கள் தண்ணிய நிலவைப் பொழிந்து கருமுகிலிடையே செல்லுங் காட்சியை எத்தனைமுறை நாம் அனைவரும் கண்டுள்ளோம். கருமுகில்தான் ஓடுகின்றது; திங்கள் ஓடவில்லை எனஎத்தனைமுறை உணர்ந்துள்ளோம். இருந்தும், ஒவ்வொரு முறையும் வானத்தைப் பார்க்கும் போதும் திங்கள் மிகவிரைந்து ஓடுகிறது என்றும், கருமுகில் பையச் சொல்லுகின்றதென்றும் தோன்றுகின்றது. விரைந்தோடும் புகைவண்டியிற் செல்லும் போது நமக்கு எதிராக மரங்களும் பொருள்களும் ஓடிப்போகின்றன அன்றோ? அசைவென்ற பழைய புலன் முழுவடிவோடும் எழும்போது பொருள்களையெல்லாம் அசைவாகவே கொள்கின்றோம். அவற்றில் வேறுபாடு உணர்வது பின்பழக்கத்தால் இயலுவதாகின்றது.

நாம் ஏதேனும் ஒரு பொருளைத் திடீர் எனப் பார்ப்போமானால், அப்பொருள் நம்மெதிர் வருவது போலத் தோன்றுகிறது. புலனுணர்வும் இவ்வாறு இயக்க வுணர்வாக விளங்குவது காண்க.

கீழ்நிலையில் உள்ள உயிர்கள், ஒன்றை யொன்று, இயக்கத்தின் வழியாகத்தான் உணர்கின்றன [illegible] புலியைக் காண்கிறது. அச்சம் கை[illegible]லற்றுச் செத்தாற்போல நிற்கிற[illegible] மரமாய அசைவற்று நின்றபோது எதிர்வரும் புலியும் இதனை வேறு பிரித்தறியாது மேலே செல்கின்றது. அச்சநிலையில் செத்தாற்போலக் கிடக்கும்செயல் இவ்வாறு இயற்கையில் எழுவதன் பயன் ஈதேயாகும். மரங்களிலும் கொடிகளிலும் சிறு பறவைகளோ, பூச்சிகளோ அசையாதிருந்தால் அவற்றை அறிய முடியாது போகின்றது. அவை தாம் பறக்கத்தொடங்கிய போதுதான் அவற்றின் இருப்பை உணர்ந்து, "இதுவரை இதனை நாம் உற்று நோக்காமல் ஏமாந்து போனோமே" என வியப்பு எய்துகின்றோம். நாமும் இயக்கத்தின் வழியாகத்தான் பிறரை அறியவும் பிறர்க்கு நம்மை அறிவிக்கவும் முயல்கின்றோம். தொலைவில் இருப்பவனுக்கு நம்மிருப்பை உணர்த்த வேண்டுமானால் நம்மையும் அறியாமல் நமது கையையும் காலையும் அசைக்கின்றோம்; குதிக்கின்றோம், கையை மேலே தூக்கி அசைக்கின்றோம்!

வாளா அசையாமல் இருப்போமானால், நம்மைக் கண்டு அஞ்சியோடும் அணில்களும் நம்மருகு வந்து நம்மேல் ஊர்ந்து செல்கின்றன. இயக்கமின்மையால், நம்மிருப்பை மறந்து மரத்தோடு மரமாய்க் கல்லோடு கல்லாய் நம்மையும் கருதிவிடுகின்றன. நம்மேல் ஈ வந்து குந்தும்போது அதனை உணர்கின்றோம். பின்னர் அது குந்திய இடத்திலேயே கிடக்குமானால் அதன் இருப்பை மறந்துவிடுகிறோம். ஆனால், மெல்ல ஊர்ந்து செல்லத் தொடங்கினாலும் அதனிருப்பை உணராமல் இருக்க இயலாது. இவ்வாறெல்லாம் இயக்கவுணர்வு என்பது உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாச் சிறப்பினதாக விளங்குகிறது.

முழுமுழுப் பொருள்களாய் உள்ளனவற்றைப் பல பிரிவுகளாகப் பிரித்துக் காட்டுவதற்கு இவ்வியக்க உணர்வு பெரிதும் பயன்படுகிறது. ஈ ஊர்ந்துசெல்லும்போது, ஊர்ந்துசெல்லும் இடங்களை எல்லாம் வெவ்வேறாகப் பிரித்துணர்கின்றோம் அன்றோ?

ஈ ஊர்ந்து செல்லும்போது ஒருபொருள் நம்முடல் மேல் அசைகிறது; அதனால் இடவுணர்வு எழுகிறது. ஒவ்வொரு பொருளையும் நம்முடல்மீது உருட்டிப் பார்த்தே அதன் அளவையும் வடிவையும் அறிய வேண்டும் என்பதில்லை. ஒரு சிறு கண்ணாடி உருண்டைமேலிருந்து என் கைமீது விழுந்து உருண்டு செல்கிறது. அதனால் அதன் வடிவையும் அளவையும் உணர்கின்றேன். அக்கண்ணாடி உருண்டை என் மீது விழாமற் போனாலும், அக்கண்ணாடி உருண்டை அசையாது நிலையாய் இருக்கும்போது அதைச் சுற்றிலும் எனது விரலையியக்கிப் பார்த்து அதன் அளவையும் வடிவையும் அறிய முடியுமன்றோ? பலபொருள்களின் அளவையும் வடிவையும் குருடன் இவ்வாறு கையால் தொட்டுப்பார்த்தன்றோ உணர்கின்றான். இருட்டில் நாம் கையால் தடவி - கையை அசைத்து - அவ்வியக்க வுணர்வாலேயே பொருள்களின் இடநிலை, தங்கிடம், போக்கு முதலியவற்றை உணர்கின்றோம். கண்ணால் காணும்போதும் கண்ணை இயக்கித்தான் காண்கின்றோம். கண் என்ன செய்கிறது? யாதேனும் ஓர் ஒளி அவ்வுறுப்பில் விழுமேயானால், கண்ணுள்ளே உள்ள ஒளியிடத்தை அப்பொருட்கு எதிராகத் திரும்புமாறு அசைத்துவிடுகின்றது. கையின் இயக்கமோ கண்ணின் இயக்கமோ, வெளிப்பொருள்களின் இயக்கமோ, நமது இயக்கமோ - ஏதேனும் ஓரியக்கத்தின் வழியாகத்தான் இடவுணர்வு பிரிவு[illegible]டு எழுந்து வேறுபட்டு விளங்குகிறது. ஆனால் [illegible]உணர்வு, உடலின் மேற்புறத்தே எழுகின்ற[illegible]த் தசைநார்களில் எழுகின்றதில்லை.

188925

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

25. ஆகாயப் பிரவேசம்

[505-வது பக்கத் தொடர்ச்சி]

இதுவரையிலும் யோகக் கலையின் முக்கிய பாகங்களான இராஜயோகம் ஹடயோகம் என்பவைகளை அப்பர் தேவாரத்தில் காணக்கூடிய அளவு கண்டோம். இனி யோகக்கலைக்குச் சம்பந்தமான மற்றும் சில கலைகளைக் காண்போம். இவைகள் பெரும்பாலும் இரண்டொரு பாசுரங்களுள் தேவாரங்களிற் குறிக்கப் பெற்றிருப்பினும், அவை யாவை யென்பதைச் சற்றே சுருக்கமாய்க் காண்போம். இக்கலைகளில் முதலாவது ஆகாயப்பிரவேசம். இது முன்னரே யோகத்திற் குறிப்பிட்டிருப்பினும் இங்குச் சிறிது விவரமாய் ஆராயப்புகுவோமாம்:—

ஆகாயப் பிரவேசமாவது பஞ்சபூதங்களில் பிரதம பூதமாகிய ஆகாயத்தில் கலந்து பிறர் கண்களுக்குத் தோன்றாது மறைதலாகும். இவ்வண்ணம் மறைதல் இருவகைத் தாகும். அஞ்சனம் முதலிய செயற்கைக் கருவிகளால் பிறர் கண்களுக்குக் காணாதுமறைதல் ஒருவகைத்தாகும். சில மூலிகைகளின் சக்தியால், அவற்றால் செய்யப்பட்ட திலகம் மை முதலியன அணிவதால் அணிந்தவன் எதிரில் நிற்போர்க்குக் காணப்படான். திருடர்கள் இரவில் கொள்ளையடிப்பதற்கு இது ஒருவகைக் கருவியாயிருந்ததென்பதும், அதனால் திருடர்கள் அரசன் அரண்மனையிலும் பயமின்றிப் பொருள்களைக்களவு செய்யச்சில சமயங்களில் நேர்ந்ததென்றும் கூறும் கதைகள் முற்றும் பொய்யுமன்று. நமது நாட்டில் பல அரிய மூலிகைகள் உள. நேரில் காணப்பட்டாலும் அவை பூண்டுகளென நாம் அலட்சியம் செய்கின்றோமேயொழியச் கடவுள் சிருஷ்டியில் பயனற்றது யாதும் இலதென்பதை அறிந்து ஆராயப்புகாதது நம்முடைய குற்றமே யாவதை நினைப்பதில்லை. திகைப்பூண்டு என்னும் ஒரு செடியுளதென்றும் அதை மிதித்த அக்கணமே மனிதன் தனது அறிவு மயங்கி உன்மத்த னுவானென்றும் கழுதையின் கூச்சல் கேட்டாலன்றி அது தெளிவதில்லை யென்றும் கூறுவதன் உண்மையை இன்று காடுகளுக்குச் சமீபத்திலுள்ள ஊரார் அறிவர். காடுகள் பலவாறாயழிந்த இக்காலத்திலும் சில காடுகளில் அரிய மூலிகைகள் உள. அவற்றில் ஒன்று ஆகாயப் பிரவேச ஜாலவித்தைக்குப் பயன்படும். பர்மாதேசத்திலுள்ள பௌத்தஜனங்களில் போர்வீரர்களும் பெருங்கொள்ளைக்காரர்களும் இதனைப் பெற்றுச் சில காலங்களுக்கு முன்னர்த் தீத் தொழில் புரிந்தனராம். இத்தகைய ஆகாயப்பிரவேசம் உண்மையில் ஆகாசத்தில் பிரவேசிப்பதாகாவிடினும், உபசாரவழக்கில் இந்நாமம் பெற்று விளங்கும்.

ஆகாயப்பிரவேசமானது நரர்களில் சித்தர்கள் செய்யும் செய்கையேயாம். எதிரிலிருப்பதும், திடீரென மறைவதும் ஊர்கடோறும் திரிவதும் அவர்களுக்கு இயலும். ஆகாயதத்துவத்தில் கலந்ததுபோல் மிருதுவாயிருப்பினும் மலைபோன்ற உரம்பெற்றும் விளங்குவர். இதைத் திருஞான சம்பந்தரும் சிவ பெருமானை,

சித்தவ டிவிலர் போலும் தேசந் திரிந்திலர் போலும்!
கத்தி வருங்கடுங் காளி கதங்க டவிர்த்திலர் போலும்
மெய்த்த நயனமி டந்தார்க் காழி யளித்திலர் போலும்
பித்த வடிவிலர் போலும் பிரம புரமமர்ந் தாரே

என்னும் திருப்பதிகத்தால் குறிப்பிட்டது காண்க.

திருநாவுக்கரசுநாயனர் ஞானக்கலைகளை அறிவதற்கு இன்றியமையாதது சிவனது திருப்பாதத்தைச் சிந்தித்தலேயென்று ஆங்காங்கு வற்புறுத்தியிருப்பதைக்கண்டோம். தான் அக்கலைகளைப் பெற்றாரென்பதற்கும் அவர் சொற்றொடர்கள் அத்தாட்சியாகும்:—

நிலைமை சொல்லுநெஞ் சே தவ மென்செய்தாய்
கலைக ளாயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடுது றையனந்
தலையின் மேலு மனத்துளுந் தங்கவே!

சிவபெருமானை "விண்ணினார், விண்ணின்மிக்கார்" என்னும் சொற்றொடர்களால் * பலவிடங்களில் அப்பர் புகழ்வதை உற்று நோக்கின், ஆகாயதத்துவத்தில் பரம அதிசயங்கள் காணக்கூடுமென்றும், அந்தத் தத்துவங்களை ஆட்சிசெய்துமேல்செல்வது† சிவபெருமான் திருவடித் தாமரையைப் பற்றினோர்க் கெளிதென்றும் விளங்கும் :—

உடலைத் துறந்துல கேழுங்கடந் துலவாத துன்பக்
கடலைக் கடந்துய்யப் போயிடலாகுங் கனக்வண்ணப்
படலைச் சடைப்பரவைத் திரைக் கங்கைப்பனிப் [பிறைவெண்
சுடலைப் பொடிக் கடவுட்கடிமைக் கட்டுணி நெஞ்சமே.

தனித்திருவிருத்தம் 2.

அஷ்டமாசித்திகளிற் சிலவற்றில் பழகிய யோகியானவன் தனது தேக உறுப்புகளைப் பிரிப்பதற்கும் கூட்டுவதற்கும் வல்லவனுவான். நமது நாட்டில் இரண்டு சித்தர்கள் சரித்தர மொன்றுண்டு. சித்தர்கள் இருவர் பல நாளாய் நண்பர்களாயிருந்தனரென்றும், அதில் ஒருவன் மற்றவனுக்குத் தான் பழகிய சித்தின் வல்லமையைக் காட்டச் சென்றானென்றும் சென்று நண்பனைக்கண்டு வலியதோர் கண்டகோடரியினால் தன்னை வெட்டவேண்டுமென்று கேட்டதாயும், அதற்குத் தன் நண்பன் இசையாதிருக்க ஒரு அபாயமும் நேராதென்று நிர்ப்பந்தித்ததால் அக்கோடரியால் வெட்டவும் அது கற்பாறையைத்தாக்கியவாறுபின்னே மழுங்கி விழுந்ததாம். பிறகு நண்பன் மெச்சி 'நல்ல காயசித்தி செய்திருக்கின்றனை, எனது தேகத்தில் இக்கோடரி என்ன செய்யும் என்று பரிட்சை செய். என்மேல் அதை ஓங்கி வீசு" என்றானும். அதற்கு முற்றும் இணங்காமல் சிறிது மெதுவாய் வீச, அக்கோடரி ஆகாயத்தினிடையே போவதுபோல் அவன் தேகமத்தியில் செல்ல அச்சமயத்தில் இரண்டாய்ப் பிரிந்த அவன் தேகமானது கோடரிபாய்ந்த மறுவிநாடியில் ஒன்றாய்ச் சேர்ந்ததாம். இதைக்கண்ட காயசித்திபெற்று அதைக் காட்டவந்த நண்பன் வெட்கமடைந்தானென்றும் சரித்திரம் கூறும். இரண்டாவது நண்பன் சித்தியே ஆகாயப் பிரவேசத்திற்கு இன்றியமையாச் சித்தாகும். இதில் தேர்ந்த சித்தனானவன் * பரமாணுக்களாய்த்தனது தேகத்தைப் பிரித்து மறுபடியும் கூட்ட வல்லவனுவான். இது மிகவும் வல்லதோர் சித்தாகிலும் ஞான உருவினதென்று கூறலாகாது. ஜடப்பொருள்களை ஆளும் ஆட்சி ஒருவகை உலகத்திறமையின்பாற் படுமேயன்றி அது பரமாவஸ்தையாகாது. இவ்வகைச் சடபதார்த்தங்களின் ஆளுகையின் திறத்தையும் சூட்சியையும், அவற்றால் வரும் சுகங்களையும் திருநாவுக்கரசுநாயனர் எண்ணியோ,

துப்பினைமுன் பற்றறு விறலே மிக்க
சோர்வுபடு சூட்சியமே சுகமே! நீங்கள்
ஒப்பனையைப் பாவித்திவ் வுலக மெல்லாம்
உழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யென்றன்
வைப்பினைப்பொன் மதிலாரூர் மணியை வைகன்
மணாளனையெம் பெருமானை வானோர் தங்கள்
அப்பனைச்செப் பிடவடைவே னும்மா னுனும்
ஆட்டுணோன் ஒட்டந்திங் கலையேன் மின்னே!
சுருக்கமோடு பெருக்கநிலை நீத்தல் பற்றித்
துப்பறையென் றனைவீரிவ் வுலகை யோடிச்
செருக்கிமிகை செலுத்தியும் செய்கை வைகல்
செய்கின்றீர்க் கமையாதே யானேன் மிக்க
தருக்கிமிக வரையெடுத்த வரக்க னாகம்
தளரவடி யெடுத்தவன்றன் பாடல் கேட்டு
இரக்கமெழுந் தருளியவெம் பெருமான்பாதத்
திடையிலேன் கெடுவீர்கா ளிடறேன் மின்னே!

திருவாரூர் - திருத்தாண்டகம். 5 & 10.

இத்தகைய யோகசூழ்ச்சிகளான கலைபொருள்கள் பெரும்பாலும், திருவாரூர், திருவையாறு, திருவீழிமிழலை முதலியதலங்களிற் பாடியபதிகங்களிற் காணலாகும். தமது பிரத்தியட்சக் கடவுளாகிய பரம்பொருளை எவ்வெத்தலங்களில் பன்னாள் நின்று பாடுகிறாரோ அங்குப் பெரும்பாலும் காணலாம்.

அரக்கர்கள் பண்டைக்காலத்தில் இக்கலையில் மிக வல்லவராய் மாயப்போர்கள் பல செய்தனரென்பது புராண இதிகாச முதலிய நூல்களிற் காணலாம். அவை உண்மையோ, அல்லவோவென நமது தற்காலக் கல்வி நாகரீகங்களில் சந்தேகப்பட்டாலும் ஒருவன் ஆகாயத்தில் மறைந்து யாவருக்கும் தெரியாமல் துன்பம் விளைக்கக் கூடுமென்கிற நம்பிக்கை அத்தகையதொழிலின்றி உண்டாகாதென்றே அநுமானிக்கலாகும். இது பெரும்பாலும் மந்திர உச்சாடனத்தால் செய்யக்கூடுமென்பது ஆன்றோர் துணிவு. நல்வழியிலிருந்து, தவஞ்செய்து இத்தகைய கல்விக் கலைகளைப்பெற்றோர் மறைந்துறைதல் அசாதாரணமன்று,

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலும்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச்சாய்க்காட்டெந் தலைவன்றாள் சார்ந்தாரே

என்னும் திருஞானசம்பந்தர் திருவாக்கு நோக்குக.

---

* (1) விண்ணினார் விண்ணின் விண்ணின்மிக்கார்
வேதங்கள் விரும்பி யோதப்
மண்ணினார்க் கின்ன ரங்கள்
பத்தர்கள் பாடி யாடக்
கண்ணினார் கண்ணி னுள்ளே
சோதியாய் நின்ற வெந்தை
மண்ணினார் வலங்கொண் டேத்து
மாமறைக் காடனாரே.

திருமறைக்காடு—திருநேரிசை 5.

(2) விண்ணினார் விண்ணின்மிக்கார் வேதங்க ளான்கு மங்கம்
பண்ணினார் பண்ணின் மிக்க பாடலார் பாவந் தீர்க்கும்
கண்ணினார் கண்ணின் மிக்க நுதலினார் காமற் காய்ந்த
வெண்ணினாரெண்ணின்மிக்கா ரிடைமரு திடங்கொண்டாரே

திருவிடைமருது—திருநேரிசை. 4.

† வானைக்கடந் தண்டத்தப்பால் மதிப்பன், மந்திரிப்பாருனைக்கழித் தப்பக்கொண்ட றுன்செய்வன வுத்தமர்க்கு ஞானச் சுடராய் நவேயுநிற்பன நம்மை யஞ்சு ஞானை யறுத்தன காண்க வையாற னடித்தலமே.

திருவையாறு-திருவிருத்தம். 4.

* நீதியாய் நிலனாகி நெருப்பாய் நீராய்
நிறைகாலா யிவையிற்றி னியம மாகிப்
பாதியா யொன்றாகி யிரண்டாய் மூன்றாய்ப்
பரமாணுவாய்ப் பழுத்த பண்க ளாகிச்
சோதியா யிருளாகிச் சுவைக ளாகிச்
சுவைகலந்த பாலாய் வீடாய் விட்டின்
ஆதியா யந்தமாய் நின்றான் றன்னை
யாரூரிற் கண்டடியே னயர்த்த வாறே.

திருவாரூர் - திருத்தாண்டகம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜண்ட்ஸ்:- யுனைட்டட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
தித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்ளுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:
டிப்போ, பம்பாய் கல்கத்தா.
NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA NANJANGUD
மதுரை காஞ்சீபுரம்.

யாப்பிலக்கணம்

செய்யுள்—ஓசை.

[515-வது பக்கத் தொடர்ச்சி]

சிறப்புறச் செய்யப்படுவது செய்யுள். எழுத்து அசை சீர் தளை அடி தொடை என்னும் ஆறு உறுப்புக்களையும் எய்தி அமையும் செய்யுள், தன் சொற்களாலே கேட்போர் மனம் மகிழவும் அறிவு தெருளவும் உயரிய பொருள்களைத் தழுவிக்கொண்டு இனிய ஓசையால் இயன்றதா யிருத்தல் வேண்டும்.

பொருட்செறிவும் உறுப்புக்களின் அமைப்புமன்றி ஓசைநயமும் உடையவைகளா யிருக்கவேண்டுமென்பது செய்யுள்களுக்கு அவசியம். இவ்வோசைகளின் வேறுபாட்டால் செய்யுள்கள் பலவகைப்படும். ஒரு விடயத்தைத் தெரிவித்தல் எல்லாச் செய்யுள்களுக்கும் பொதுவகையில் உரியதோர் தொழில். புலவர்கள் செய்யுள்களை வரைவது என்பது பிற்காலத்து வழக்கு; பிறர்கேட்கப்பாடுவதே முற்காலத்தியமுறை. ஆதலின் அவர் தெரிவிக்கவரும் விடயத்திற் கேற்ப இசையும் அமைந்திருப்பது இயற்கையாயிற்று. இவ்வாறு அமையவல்ல இசை, இதுஇது தான் என்று ஐயமறவரையறுத்துரைத்தல் இயலாதாயினும் பொதுவகையில் அவை பேதப்படுவதை உணர்ந்துகொள்ள நாம் நாவினால் ஓதி ஓதிச் செவியைப் பழக்கிக் கொள்ளலாம். ஓரேவிடயத்தை இருவேறு பாக்களில் அமைத்துப் பாடிப்பார்க்கும்போது இவ்வொலிவேற்றுமை புலப்படும்:—[ஒலி, ஓசை, இசை, என்பன ஒரு பொருளுடைய சொற்கள்]

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு.

என்னும் நளவெண்பாச் செய்யுளையும், அதன் கருத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கின்ற,

கயலினம் புரளக் காவிகண் மலர
மையறு நளினத் தேன்தளை யவிழ
நிலமா தென்னும் நல்லாள்
வலக்கண் போன்றதவ் வளங்கெழு பதியே.

என்னுமிச் செய்யுளையும் அடுத்தடுத்து ஓதிப்பாருங்கள். இரண்டும் ஒருவிடயத்தைத் தெரிவித்து நிற்கின்றன வெனினும், முன்னது, இவ்விடயத்தைக் கேட்பவர் கேளுங்கள், என்ற பான்மையில் விளம்புவதுபோல் இசைக்கும். பின்னது, வேறொருவனை அழைத்து, 'நானுனக்கு ஒன்று உரைக்கின்றேன் கேள்' என்பதுபோன்றவோர் ஓசையோடு இசைக்கும். ஓரே செய்யுளின்கண் இவ்விரண்டு இசையும் அடுத்தடுத்து வரும்படி பாடப்பெற்ற செய்யுள்களும் சில உள. அவைகளை ஓதிப்பார்க்குமிடத்து இவ்வொலிவேற்றுமை புலப்படுவது எளியதாகும்:—

தன்க ணளியவாய் நின்றேற்குத் தார்விடலை
வன்கண்ண னல்கா னெனவாடு—மென்க
ணிடரினும் பெரிதா லெவ்வம்
படரினும் யெரிதாற் பாவியிப் பகலே

இதனில், முதலிரண்டடிகள் தம்பொருளை விளம்பிக் கூறுவது போலவும், பின்னிரண்டடிகள் அழைத்துக் கூறுவதுபோலவும் ஓசை அமைந்து நடப்பது காண்க. இதுவேபோல்,

நிழன்மணி நின்றிமைக்கு நீரார மார்பின்
அழன்மணி நாகத் தணையான்—சுழன்மணிசூழ்
பொன்னகரம் போக்கிய பூம்பணிச்சை நன்னீர்
இளந்தளிர் மாவனுக்கு மேனி விளங்கு
நளிமலர் நறுநுத லரிவை
அளிமற் றிஃதோ வகலுமென் னுயிரே

என்னுமிச் செய்யுளிலும் முதல்வந்த நான்கடிகள் விளம்பிக் கூறுவது போலவும் பின்னிரண்டடிகள் அழைத்துக் கூறுவது போலவும் ஓசைபெற்று நடப்பதை ஓதி உணரலாம்.

ஒரு பொருளைக் கூறுகின்ற ஓசையமைப்பானது, விளம்பிக்கூறல் என்றும், அழைத்துக்கூற லென்றும் இருவகைப்பட்ட தாய் இனிதுநடக்கலாம் என்பதைக் காட்டினோம். விளம்பிக் கூறலாவது, ஒருவனை மற்றொருவன், அழைத்து, 'இது கேள்' என்னுந் தொனியின்றி, அவனுக்கு ஒரு விடயத்தைக் கட்டுரைப்பதாகும். இவ்வாறு கட்டுரைத்துக் கூறுங்கால் எழுகின்ற ஓசையைச் செப்பலோசை என்பர். அழைத்துக்கூறலாவது, ஒருவன் ஒன்று சொல்வதும் அதற்கு மற்றவன் பதில்சொல்வதும் போ லில்லாமல், ஒருவன் மற்றவனை அழைத்து ஒரு விடயத்தைப் பலபடி விரித்துக் கூறுவதாகும். இவ்வாறு கூறுங்கால் எழுகின்ற ஓசையை அகவலோசை என்பர்.

திருக்குறள்செய்யுள்களும் நளவெண்பாச் செய்யுள்களும், நன்னெறி, நல்வழி, நீதிநெறிவிளக்கம் ஆகிய இந்நூல்களின் செய்யுள்களும் செப்பலோசை உடையன—இவையெல்லாம் வெண்பா என்னும் பாவினால் ஆனவை. வெண்பாவிற்கு உரிய ஓசை செப்பலோசை.

புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, மணிமேகலை ஆகிய இந்நூல்களிலுள்ள செய்யுள்கள் அகவலோசை உடையன. இந்நூல்களின்கண் உள்ள பாக்கள் ஆசிரியப் பாக்கள். ஆசிரியப்பாவிற்குரிய ஓசை அகவலோசை. ஆசிரியப்பாவிற்கு அகவற்பா என்ற பெயரும் உண்டு.

இச் செப்பலோசை அகவலோசை என்பனவன்றித் துள்ளலோசை தூங்கலோசை என வேறு இருவகை ஓசைகள் அமைதலும்இயலும். முன்னுரைத்த உதாரணங்களை மீண்டும் எடுத்துக் கொள்வோம்:—

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்-பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு.

இது, கட்டுரைத்து விளம்புவதாகிய ஓசையுடன் அமைந்தவோர் வெண்பா, இவ்விடயத்தையே ஆசிரியப்பாவால்,

கயலினம் புரளக் காவிகண் மலர
மையறு நளினத் தேன்தளை யவிழ
நிலமா தென்னும் நல்லாள்
வலக்கண் போன்றதவ் வளங்கெழு பதியே

என்று கூறுங்கால், ஒருவனை யழைத்து விரிவுபடக் கூறுவதற்குரிய அகவலோசை எழுகின்றது. இவை இரண்டிலும், கூறும் ஓசையினது குறிப்பில் வேறுபா டிருக்கலாமாயினும், அவ்வோசைதான், இடையிடையே உயர்வதுந் தாழ்வதுமின்றிப் பெரும்பாலும் ஒருபடித்தாய்ச் செல்கின்றது. செய்யுள் முழுவதும் தொடர்கின்ற வோசை பெரும்பாலும் சமமாக இருப்பது,செப்பலோசைக்கும் அகவலோசைக்கும் இயல்பு. இனி இப்பொருளை,

கயற்கூட்டம் புரண்டோடமுகைக் குவளை கட்டவிழ
மையறுசீர் மரைமலர்த்தேன் தளைநெகிழப்புவிமடந்தை
நயனம்போற் பெருமையினுற் றிகழ்ந்திடுமால் கடல் [புடைசூழ்
நலமுடைய படிதனிலே முதனாட்டும் நாடிதுவே.

இதனில், ஓசை இடையிடையே சிறிது உயர்ந்து துள்ளிச்செல்வதுபோல் தோன்றுகின்றது. இவ்வாறு செல்லும் ஓசையைத் துள்ளலோசை என்பர். இவ்வோசை கலிப்பா என்னும் பாவிற் குரியது.

கடிப்புனல் கால்பட்டுக் கலுழ்தேறிக் கவின்பெற
நெடுங்கயத் தயலய லயிர்தோன்ற வம்மணல்
வடித்தூர வரிப்பபோ லீங்கைவா டுதிர்புகப்
பிரிந்தவர் நுதல்போலப் பீர்வீயக் காதலர்ப்
புணர்ந்தவர் முகம்போலப் பொய்கைபூப் புதிதீன
மெய்கூர்ந்த பனியொடு மேனின்ற வாடையாற்

கையாறு கடைக்கூட்டக் கலக்குறாஉம் பொழுதுமற்
பொய்யேமென் றுயிராய் புணர்ந்தவ ருரைத்ததை.

இந்தச் செய்யுள் செப்பலோசையும் அகவலோசையும் போலல்லாது துள்ளலோசை பெற்றுச்செல்வதை ஓதி உணரலாம். திருவரங்கக் கலம்பகத்தில், "சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசில் வீற்றிருக்கும், நீர்பூத்ததிருமகளும் நிலமகளும் அடிவருட" எனவரும் முதற்செய்யுளை நீங்கள் முன்பு தமிழ்ப்பாடத்தில்கற்றிருக்கின்றீர். அதனை ஓதிப்பாருங்கள் — துள்ளலோசை புலப்படும்.

இனி, தூங்கலோசையாவது, இடையிடையே தாழ்ந்து இசைப்பதாகும். முன் உரைத்த விடயத்தையே,

கயல்புரள்வன புனலிடங்களும்
முகைவிரிவன கயிரவங்களும்
தேனவிழ்வன மரைமலர்களும்
பொலிதலால்
புவிமகள் நயனம் போலும்
கவின்பெறு நிடதச் சேமநன் னாடே.

எனப் பாடுங்கால், முதல் மூன்றடிகளில், எழுச்சியும் விரைவுமின்றி சீர்தோறும் அடிதோறும் ஓசை தூங்கித்தூங்கி இசைப்பது உணரலாம். [பின்னிரண்டடிகளில் அகவலோசை அமைந்திருக்கும்] இத் தூங்கலோசை வஞ்சிப்பா என்னும் பாவிற்குரியது. இப்படியே,

வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை
நினைத்தன்பொடு தொழுதேத்தினர்
நாளும்,
மயலார் நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே

என்னுமிச் செய்யுளிலும் முதல்மூன்றடிகளில் தூங்கலோசை யமைந்திருக்கக் காணலாம்.

ஆதலின், செய்யுள்களில் அமையவல்ல ஓசை, செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என நான்காகும். இவை ஒவ்வொன்றிலும் உட்பிரிவுகள் சில உள. அவைகளையும் இங்கு ஒருவாறு குறித்து வைக்கலாம்.

ஒரு செய்யுளின்கண் அமைந்த ஓசை சிறிது உயர்ந்து செல்லலாம், அல்லது தாழ்ந்து செல்லலாம், அல்லது, உயர்ந்து மில்லாது தாழ்ந்துமில்லாது சமமாகச் செல்லலாம். உயர்ந்து செல்லும் ஓசையை, ஏந்திசையென்றும், தாழ்ந்துசெல்லும் ஓசையைத் தூங்கிசையென்றும், சமமாகச் செல்லும் ஓசையை ஒழுகிசையென்றும் பிரிக்கலாம். இப்பிரிவுகள் செப்பலோசைக்கும் அகவலோசைக்கும் பொருந்தும்.

துள்ளலோசையும் தூங்கலோசையும் உடைய செய்யுள்கள், உயர்ந்து இசைக்கலாம், அல்லது அத்துள்ளலுக்கும் தூங்கலுக்கும் இடையே அழைத்துரைப்பது போன்ற இசையுந் தோன்றலாம், அல்லது விட்டுவிட்டு இசைப்பது மாகலாம். உயர்ந்து ஒலிப்பதை ஏந்திசை என்றும், அழைப்பதுபோன்ற இசையுடையதை அகவலிசை யென்றும், விட்டு விட்டிசைப்பதைப் பிரிந்திசை என்றும் பிரிக்கலாம். இப்பிரிவுகள் துள்ளலோசைக்கும் தூங்கலோசைக்கும் பொருந்தும்.

செப்பலோசை:
- ஏந்திசைச் செப்பலோசை
- தூக்கிசைச் செப்பலோசை
- ஒழுகிசைச் செப்பலோசை

அகவலோசை:
- ஏந்திசை அகவலோசை
- தூக்கிசை அகவலோசை
- ஒழுகிசை அகவலோசை

குறிப்பு:—இந்தத் தூக்கிசைவேறு தூங்கலோசை வேறு. தூங்கலோசை என்பது கனத்த ஓசையாய்ச் செய்யுளின்கண் நிகழ்வது. தூங்கிசை, செப்பலோசை அகவலோசைகளுக்குள்ளடங்கியதாய் அவைகளின் ஒரு விகற்பமாய் நிகழ்தல்.

துள்ளலோசை:
- ஏந்திசைத் துள்ளலோசை
- அகவற்றுள்ளலோசை
- பிரிந்திசைத் துள்ளலோசை

தூங்கலோசை:
- ஏந்திசைத் தூங்கலோசை
- அகவற்றூங்கலோசை
- பிரிந்திசைத் தூங்கலோசை

குறிப்பு:—அகவலோசை என்பது வேறு; அகவற்றுள்ளல் என்னும் ஓசைகள் வேறு.

இப்பிரிவுகளுக்கேற்ற உதாரணங்களைப் பின்னர்க் காட்டுவோம்.

தனிப்பாடல்கள்

தமிழ் மொழி விழைவு.

செந்தமிழ் மக்களே வாரீர்-எங்கள்
தெய்வத் தமிழ்மொழிச் சீரினைத் தேரீர்
அந்தமி லம்மொழி மாதா-படும்
அல்லலைத்தீர்க்க வறிவுவ ராதா (செந்)

முச்சங்கத் தரியணை யேறி-மன்னர்
முடிதொட்ட மூவரும் அடிதொட்டுப் போற்ற
விச்சையா லரசாண்ட மாதா-அவள்
வேதனை தீர்க்க விரக்கம்வ ராதா- (செந்)

இன்னமு தோதெளி தேனோ-என
எஞ்செவிக் கினிக்கின்ற மொழியேது தானோ
அன்னை மொழிதனை நாமோ-வெறுத்
தருவருத் தவமதித் திடலழ காமோ. (செந்)

சிந்தையிற் றேனமு தூறி-நாவில்
தித்தித்துத் தித்தித்துச் செவிவழி யேறி
வந்து கனிந்திருள் கீறி-எமை
வாழ்விக்கு மொழியினை மறப்பலோ மீறி (செந்)

வேற்று மொழிகளைக் கற்றோம்-எங்கள்
மெய்யான முதுசொத்தை விலைபேசி விற்றோம்
ஆற்றில் புளிகரைத் திட்டோம்-ஐயோ
அருமந்த தமிழினையறியாதுகெட்டோம். (செந்)

நற்றமிழ் ஓதுதல் விட்டோம்-பண்டை
நடையுடை பாவனை நன்னெறி விட்டோம்
மற்றும யன்மொழி தொட்டோம்-முந்தை
மறைநெறி சாதிச மயமுங் கெட்டோம். (செந்)

ஏதமில் தமிழன்னை வாட-சற்றும்
இசையா மொழிக்கள்ளி யிறைத்தோமே நன்
மாதா பசி புசி யாதே-மகன்
மாதனஞ் செய்கின்ற வாறிது சூதே (செந்)

வானத்தைக் குத்தியி ளைத்தோம்-நல்ல
வழியிருக் கப்பாழுங் குழியிற் றிளைத்தேம்
கானலை நீரென்று நம்பிக்-கால்கள்
கடுத்திட வோடிக் களைத்தோமே வெம்பி (செந்)

உமிக்குத்திக் கைசலித் திட்டோம்-நல்ல
உணவிருக் கவிட முண்டென்றே கெட்டோம்
அமைத்திட்ட பாற்பசு விட்டோம்-ஐயோ
ஆகாம லடுக றந்திளைத் திட்டோம் (செந்)

மெய்நெறிச் சுகவாழ்வு போச்சே-எங்கும்
வீணா வார பிணுக்குகள் ஆச்சே
மையற்பே ராசைக்கை வீச்சே-தீயும்
வாய்த்தவி டும்போன வாறினி ஏச்சே (செந்)

ஐம்புலச் செம்புலம் வேண்டில்-கேரில்
அருந்தமிழ் மனைவாழ்க்கை அறநெறி வேண்டில்
செம்பொரு ளின்பமும் வேண்டில்-தெய்வத்
திருவள்ளு வர்மொழி சிந்தைசெய் வீரே (செந்)

எங்குள நீதியு மீண்டு-ஓதி
இருமைக்கும் பெருமைகள் எய்திட வேண்டில்
மங்கல மறைமொழி அவ்வை-அவள்
மந்திர வாய்மொழி மனங்கொளுஞ் செவ்வே

அறிவு நிரம்பிட வேண்டில்-உண்மை
அன்பு மருளு மடைந்திட வேண்டில்
உறுதிப் பொருள்பெற வேண்டில்-எங்கள்
ஒண்டமிழ் நூல்களை ஓதிடு வீரே (செந்)

மானமும் வீரமுஞ் சேரும்-செம்மை
மாறாத வாழ்க்கையு மாண்மையும் சேரும்
ஞானமும் முத்தியும் சேரும்-எங்கள்
இன்றமிழ் நூல்களை ஏத்திடு வீரே. (செந்)

இரவு விடிந்தது கேளீர்-தமிழ்
இளவள ஞாயி றெழுந்தது பாரீர்
பரவுவதற் கோடி வாரீர்-வந்து
பணிமின்கள் படிமின்கள் பயமில்லைப் பாரீர் (செ)

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0. கலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணு 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T.N- சேஷாசலம் ஐயர் B.A.B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணு 12.

கலாநிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றுகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி
லிமிடெட்,
சென்னை.

சுகவாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினுல் வியாதிகள் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்திரைக ளடங்கிய டப்பி 1க்கு ரூபா 1

இனும்! இனும்!!

போஜன விதி

உடனே விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
மதராஸ்.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906.

இன்ஷுயரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷுயரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ்	ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு	11,51,813.
பிரீமியம் வரும்படி	30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி	7,47,608

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்
1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலீஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமனவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷியூரென்ஸ் பில்டிங் 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷுரன்ஸ்.
கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. 2 0 0
வெளி நாடு ,,	ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணு 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

குறைந்த விலை! நிறைந்த விஷயம்!
சிறந்த கதை! உயர்ந்த பதிப்பு!

பாவலர், நாவலர், மற்றி யாவரும் விரும்பும் பாச்சுவை ததும்பப் புதுமை பெற்றிலங்கும்

சுகுணவதி அல்லது
மனம்போல மாங்கலியம்

இனிமை செறிந்த தமிழ் நாவல்
ஸ்ரீமான். மாங்கை. சா. கிருஷ்ணய்யர் எழுதியது.

விலை ரூபா ஒன்றே

ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ்,
மைலாப்பூர், மதறாஸ்.

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C.C.S.

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M.A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidently in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the Cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

"KALANILAYAM"
VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

கலா நிலய முன்னைய இதழ்கள்

மூன்றாண்டு இதழ்களும் பயிண்டுசெய்தும் செய்யாமலும் கிடைக்கும்

முதல் ஆண்டு:—ராமாயணம்—பால காண்டம், அகப்பொருள் வரலாறு, காந்தார நாட்டுக் கட்டழகி எனும் சிறந்த நாவல், மலர் வனம், பழமுதிர்சோலை, தமிழ்ப் பாடம், கண்ணப்ப நாயனார் சரித்திர ஆராய்ச்சி, முதலிய பல அரிய கட்டுரைகள்.

இரண்டாமாண்டு:—அப்பர் தேவார ஆராய்ச்சி, நாவல், ஆங்கிலக் கட்டுரை மொழிபெயர்ப்பு, கம்பராமாயணம்—பாலகாண்டம், அகப்பொருள், தமிழ்ப் பாடம் ஆய பல அரிய கட்டுரைகள்.

மூன்றாமாண்டு:—கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம், மானத சாத்திரம், குறுந்தொகை (உரையுடன்) ஸமஸ்கிருத நாடக மொழிபெயர்ப்பு. அனைய பல கட்டுரைகள்.

தோல் பயிண்டு—விலை உள்நாடு ரூ. **10—8—0**, வெளிநாடு ரூ. **12—0—0**.

விலாசம்:— (தபால் சார்ஜ் உள்பட.)

கலா நிலயம், புரசைபாக்கம், சென்னை.

பண்டாரம் மாந்த எண்ணை

சாதாரணமாய்க் குழந்தைகளுக்கு உண்டாகும் மலச்சிக்கல், மாந்தம், இழுப்பு, ஜுரக் கட்டி, முதலியவைகளை ஆரம்பத்திலேயே வரவொட்டாமல் தடுத்துக் குழந்தைகளை நன்றாய்க் காப்பாற்றும் சஞ்சீவி எண்ணை.

விலை அணா **12**. எங்கும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.

எம். சி. என்ஸ். எக்லெக்டிக் பார்மசி & டிஸ்பென்ஸரி,
49, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

திரு அருட்பா

வசனப்பகுதி

ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பி. ஏ. எம். எல்

அவர்களது அடக்க விலைப்பதிப்பு.

புஸ்தகவிலை, 4, அணாவும், புஸ்தக போஸ்ட் செலவிற்காக, 1 அணாவும், ஆக, 5 அணா தபால் ஸ்டாம்புகள் அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

கலாநிலயம்—புரசைபாக்கம் சென்னை.

வர்த்தமானம்

இறந்தவள் எழுந்தாள்:—பஞ்சாபில் அம்பாலாவுக்குப் பத்து மைல் தூரத்திலுள்ள ஓர் குக்கிராமத்தில் ஓர் பெண்ணுக்கு ஒரு கண் குருடு. அவள் வியாதியால் பீடிக்கப்பட்டுச் சிலநாட்களுக்கெல்லாம் மாண்டனள். பிரேதத்தை மயானத்திற்குக் கொண்டுபோய் வைத்ததும், பிணத்தின் கால்கள் மெள்ள அசைய ஆரம்பித்தனவாம். பின்னர் பெண் மிகஅழகிய தோற்றத்தோடு உயிர்த்தெழுந்துவிட்டதைக் கண்ட உறவினரது ஆச்சரியத்திற்கு எல்லை யில்லை. இரு கண்களினும் பெண்ணுக்குப் பார்வை வந்து விட்டது. உயிர்த்தெழுந்த பெண் தன்கணவன் சமீபத்தில் சென்று தான் உண்மையாக இறந்ததாகவும், பிறகு தன்னை யாரோ சிலர் கிருஷ்ண பரமாத்மாவிடம் கொண்டு சென்றதாகவும், கிருஷ்ணன் கோபிகா ஸ்திரீகளுடன் உல்லாசமாயிருந்த காட்சியைத் தான் கண்டதாகவும், தனது பூலோக வாழ்க்கை இன்னும் முடிவடையாததால் திரும்பிப் பூலோகம் செல்லுமாறு அவர்கள் கூறவே, தான் மீண்டும் உயிர்த்தெழுந்துவிட்டதாகவும் தெரிவித்தனள். இக்கதை ஜில்லா வெங்கும் மிக விரைவில் பரவிவிட்டது. ஜனங்கள் திரள் திரளாக அப் பெண்ணைக் காணச்சென்று வருகின்றனர். அவ் வீட்டின் முன்பாகச் சதாபெருங் கூட்டம் காத்துக்கொண் டிருக்கிறது. அப்பெண் கையில் ஜெபமாலை எடுத்துக்கொண்டு வெளி வந்து கிருஷ்ண பகவானை யாவரும் பக்தி செய்து அவரது கடாக்ஷத்தைப் பெறவேண்டுமென்று சொல்லிவருகிறாள்.

***

மகாத்மா காந்திக்கு அமெரிக்கர் அழைப்புக் கடிதங்கள்.

மகாத்மா காந்திக்கு,

நான் உங்களை நேரில் பார்க்காதபோதிலும் இக் கடிதத்தை நான் ஒரு உண்மையான நண்பருக்கு எழுதுகிறேன். ஏனெனில் நான் உங்களுடைய ஜீவிய சரித்திரத்தையும் நீங்கள் இந்தியாவுக்குச் செய்துள்ள வேலைகளையும் வாசித்த பின்பு நான் உங்களைப்பற்றித் தெரிந்துகொள்ள முடியுமென்றே உணருகின்றேன். நானும் எனது வாழ்நாள் முழுவதையும் சீனாவுக்கு அர்ப்பணம் செய்திருக்கிறேன். நான் அங்கு 44 வருஷங்களுக்கு முன்பு சென்றேன். நீங்கள் இந்தியாவில் செய்துவருவதைப்போல எங்களுடைய மக்களிடையே ஒரு புதிய தேசிய வாழ்க்கையை உண்டுபண்ண அபினியையும் மற்றும் தீமைகளையும் ஒழிக்க அவ்வருஷங்களில் நாங்கள் போராடி வந்திருக்கின்றோம். சுதந்திரம் பெறும் வேலையில் இந்தியாவும் சீனாவும் ஒத்துழைக்க வேண்டும். மக்களை அறியாமையிலும் வறுமையிலும் கிடந்து உழலும்படி செய்யக்கூடிய அபினி, குடி முதலிய தீமைகளை ஒழிக்க இரு தேசங்களும் வேலை செய்யவேண்டும்.

நாம் உலக மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற அவர்களைத் தட்டி எழுப்பவேண்டும். வேறு யாரையும் விட நீங்களே இதைச் செய்ய முடியுமென்று நான் நன்கு அறிவேன். இக்காரணத்தால் நான் மிஸ்மேரி லீட்சுடனும் சர்வதேச சீர்திருத்த சங்க சர்வ தேசக் காரியதரிசி டாக்டர் வர்ஜில் ஜெ. ஹன்ஷாவுடனும் சேர்ந்துகொண்டு உங்களை அமெரிக்காவுக்கு அழைக்கின்றேன்.

உங்களுடைய அமெரிக்க விஜயம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நன்மையளிக்குமென்று நான்கூறுகிறேன். நீங்கள் கூடிய சீக்கிரம் அமெரிக்கா விஜயம் செய்வதைக் குறித்து ஆலோசனை செய்வீர்களென நம்புகிறேன்.

உண்மையுள்ள,

எட்வர்ட் டப்ளியு துவிங்.

டாக்டர் வர்ஜில் கடிதம்:—டாக்டர் வர்ஜில் மே மாதம் 27உ மகாத்மாஜிக்கு எழுதியுள்ள கடிதமாவது:—

இச்சமயம்நீங்கள் அமெரிக்காவுக்கு விஜயம்செய்ய முடியாதென உங்களுடைய காரியதரிசி யாகிய திரு பியாரிலாலிட மிருந்து எனக்கு ஒரு கடிதம் கிடைத்திருக்கிறது. நீங்கள் அமெரிக்காவுக்கு விஜயம்செய்ய வேண்டிய காரணங்கள் சிலவற்றைக் கூற எனக்கு அனுமதி யளிக்கவேண்டும் 1. நீங்கள் உங்களுடைய வேலைக்கு அமெரிக்கர்களின் அனுதாபமும்பொதுவாக உலக மக்களின் அனுதாபமும் கிடைக்கும்படிசெய்ய வேண்டும். இவ்வனுதாபம் ஏற்கனவே இருந்து வருகிறது. ஆயினும் நீங்கள் வெளிநாடுகளில் பலபொதுக் கூட்டங்களில் நெருக்கம் வைத்துக் கொள்ளுவதனால் அவ்வனுதாபம் அதிகப்படக்கூடும். 2. சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகிக்காத படி உலகத்திலுள்ள இளைஞர்களுக்கு ஏராளமான பணத்தைத் திரட்டுவது.

மிஸ் மேரி லீட்ச் கடிதம்:—மிஸ் மேரி லீட்ச் மகாத்மாஜிக்கு ஜூன் மாதம் 1-ந்தேதி எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:—

உங்களுடைய அருமைத் தேசங்களாகிய, இந்தியா ஆப்பிரிக்கா, ஆகியவைகளின் நன்மையைமுன்னிட்டும் நீங்கள் இங்கு விஜயம்செய்து பிரிட்டிஷாரின் அபினி, சாராயம் வியாபாரத்தின் மூலம் 90 கோடி மக்களுக்கும் 3 தேச மக்களுக்கும் செய்யப்பட்டிருக்கும் அபாண்டமான குற்றத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இத்தகைய தீமைகளைச் சகிக்க முடியாமல் விழித்துக்கொண்ட கிறிஸ்தவமதம் கடவுளின் உதவியால் அவற்றை அறவே ஒழித்துவிடும்.

"லோகோபகாரி"

188925

KALANILAYAM.
REG. NO. M, 2324.

:: பிரபல ஜோதிஷர் :: மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர்.

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ- 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா. 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பணடித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

—:வைத்திய ரத்ன:—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு. இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனாம்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்)
ரூ 18—0—0

காரநேஷன் அகராதி
(தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம்
வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ.,
புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு.

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

ஆயுர்வேத ரத்ன பண்டிட்
டாக்டர் N. V. ஸ்ரீராமாசார்லு
அவர்களின்

ஸித்தகல்ப மகரத்துஜம்

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம் மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபகசக்தி பெறவைக்கவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா 10

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி
லிமிடெட், சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A.,B.L.
தபால் பெட்டி 151, சென்னை.
தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.
கேட்லாக் இனாம்.

தமிழன்பர்களே! இவரைத் தெரியுமா?

இவரே தற்காலத் தந்தியையும், டெலிபோனையும் கிராமபோனையும், சினிமாவையும், மின்சார விளக்கையும் கண்டுபிடித்தவர். கம்பியில்லாத் தந்திக்கு வழிகாட்டியவர். ஏழைக் குடும்பத்தில் 1847-ல் பிறந்து, தாய் சொல்லிக்கொடுத்த கல்வியினால் பத்திரிகை விற்பவராயிருந்து எண்ணிலாப் புதுமைகளைச் செய்து அமெரிக்காவில் பெருஞ் செல்வராய்த் திகழும்,

தோமாஸ் ஆல்வா எடிசன்

இவருக்கு இப்போது வயது 84. இன்னும் ஊண் உறக்கமின்றிப் புதிய கருவிகளைக் கண்டுபிடித்து வருகின்றார். இப்போது இலைகளினின்றும் ரப்பர் எடுக்க முயற்சிக்கின்றார். இவர் ஹென்ரி போர்டுக்கு நண்பர்.

இவரது வரலாறு படிக்கப்படிக்க இன்பந்தரும். ஆப்டோன் படங்களுடன் உயர்ந்த காகிதம் அழகிய கட்டடம். விலை ரூபா 1-4.

தபாற் செலவு அணா 4.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.,
6, பவளக்காரத் தெரு, சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)